ISSN 1391-9504

நகர சபை, யாழ்ப்பாணம்

# விஜய்

Vijey විජය්

05.10.2011 - மலர் 08, இதழ் 31

## உலக ஆசிரியர் தினம்

## உலக தபால் தினம்




விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்புக் கூட்ட தீர்மானங்கள்

ஒல்லாந்தத் தலைவரின் செய்தியில், பிரித்தானியர்கள் ஒல்லாந்தருக்குச் சொந்தமான பிரதேசங்களைப் பொறுப்பேற்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், சமாதானம் ஏற்படும்பொழுது, அப்பிரதேசங்கள் மீண்டும் ஒல்லாந்தரிடம் கையளிக்கப்படும் என்றும் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், அதனை எதிர்த்தால் ஆங்கிலேயர் அப்பிரதேசங்களைப் பலாத்காரமாகக் கைப்பற்றுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. கொழும்பு மந்திராலோசனை சபை இப்பாரிய பிரச்சினை குறித்து கலந்துரையாடுவதற்காக கூடியது. ஜூலை மாதம் 25 ஆம் திகதி இக்கூட்டம் நடைபெற்றது. அரசாங்கம் ஆங்கிலேயர் பொறுப்பேற்கும் யோசனையை ஏற்றுக்கொள்வதோடு, சேனைகளை கையேற்க விரும்புவதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு சில வருடங்களுக்கு முன்னரும் ஒல்லாந்தரின் சேனைகளை ஆங்கிலேயருக்கு கையளித்திருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, 800 பேரைக்கொண்ட ஆங்கில யுத்த சேனை ஒன்றைப் பொறுப்பெடுக்க அவர்கள் தீர்மானித்தனர். அத்தீர்மானத்தை ஆங்கிலேயருக்குத் தெரியப்படுத்தினர். அவர்கள் அதற்கு இணங்கினர். 'ஒஸ்டேன்பர்க்' கோட்டையின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட 300 போர் வீரர்களைக்கொண்ட ஆங்கிலேயப் படையணியொன்றைப் பொறுப்பெடுக்க அவர்கள் இணங்கினர். இதனை திருகோணமலையில் உள்ள தளபதிக்குத் தெரியப்படுத்தினர்.

திருகோணமலைக்குப் படை அணியினரை அழைத்துவரும் ஆங்கில கடற்படைத்தளபதியான அட்மிரல் ஒருவருடன், திருகோணமலை யுத்த தளபதி கொண்டுள்ள கடிதத்தொடர்பின்மூலம், ஆங்கிலேயர் ஒல்லாந்தரின் கோட்டையைக் கைப்பற்றுவதற்காக, பல்வேறு ஆயத்தங்களை மேற்கொள்கின்றனர் என்ற விடயத்தை ஏற்கனவே அறிந்து வைத்திருந்தார். அத்தொடர்பு விருப்பமின்றியே நிகழ்ந்தது. ஆள்பதியால் அனுப்பப்பட்ட செய்தியில் உள்ள குற்றங் குறைகளையும் அவர் கண்டுபிடித்தார். அக்குற்றம் குறித்த விடயங்களை கொழும்பிற்கு அறிவிக்கும்வரை பிரித்தானியர் திருகோணமலை வருவதற்கு இடமளிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,000 இடைநிலைப் பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள்

## அடுத்த வருடம் நியமனம்

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவாகியுள்ள ஆயிரம் பாடசாலைகளுக்கு அடுத்த வருடம் (2012) ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலைகளில் குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்பிப்பதற்காகவே, இந்த ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. அதன்படி; தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு மொழிகள், விஞ்ஞானம், கணிதம் மற்றும் அழகியற்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்காகவே, பட்டதாரி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை என்பனவற்றினூடாக, இப்பட்டதாரிகள் தெரிவுசெய்யப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## 2011 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,
'விஜய்'
த.பெ.எண் 2037, கொழும்பு.

என்ற முகவரிக்கு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். பிந்திக் கிடைப்பவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.

# இலங்கையில் கணினி வசதியுடன் 3,300 பாடசாலைகள் உள்ளன

கணினி வசதியுடன்கூடிய 3,300 பாடசாலைகள் நாடளாவிய ரீதியில் உள்ளதாக கல்வித்துறை பிரதியமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த வருடம் பாடசாலைகளில் புதிதாக கணினி விஞ்ஞான ஆய்வுகூடங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இதன்படி, இலங்கையில் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான கணினிகளைக்கொண்ட 3,300 பாடசாலைகள் உள்ளன. அத்துடன், ஒரு கணினி அல்லது இரண்டு கணினிகளைக் கொண்ட பாடசாலைகள் 2,000 உள்ளதோடு, மின்சாரமற்ற பாடசாலைகளுக்காக சூரியசக்தியில் இயங்கும் 100 கணினி ஆய்வுகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




# எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள அபாய ஒலி எழுப்பும் பறவைகள்

பறவைகள் கூட்டமாக இருக்கும் ஓர் இடத்தில் தமது எதிரிகள் ஏதும் வந்தால் அவற்றிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, சில பறவைகள் எச்சரிக்கைக் குரல் எழுப்புவதாகவும் அதனூடாக, அவை தமது சகாக்களை உஷாப்படுத்துவதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.



அவ்வாறே,சில பறவைகள் தமது சுயநலத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொய்யான அபாய எச்சரிக்கைக் குரலை எழுப்பித் தமது சக பறவைகளை ஓடி ஒளியச் செய்கின்றன என்றும் தமது ஆய்வின்போது விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் விலங்கியல் சங்கத்தைச் சேர்ந்த சார்ள்ஸ் மன் என்ற விலங்கியல் ஆய்வாளர் தனது குழுவினருடன், தென் அமெரிக்காவின் அமேசன் காடுகளில் பல இனப் பறவைகள் கூட்டமாக வாழும் முறைகளை ஆராய்ந்த போதே, இந்த உண்மையை அறிய முடிந்துள்ளது. அதாவது, பல்வேறு இனப் பறவைகள் ஓரிடத்தில் கலந்திருக்கும்போது, அங்கு ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பறவைகள் காவல் பணியை மேற்கொள்ளும். அத்தருணத்தில் கழுகு, பருந்து போன்ற எதிரிப் பறவைகளின் நடமாட்டம் தெரிந்தால், காவல் பணியில் ஈடுபடும் பறவைகள் ஒருவகை அபாய ஒலியை எழுப்பும். அதைக் கேட்டதும் ஏனைய பறவைகள் சட்டென்று தலைமறைவாகி விடுகின்றன என்று சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காவல் பணியில் ஈடுபடும் பறவைகளில் 'டானேஜர்' (Tanager) என்ற பறவையினமும் 'ஏன்ட்ஷ்ரைக்' (Antshrike) என்ற பறவையினமும் குறிப்பிடத்தக்கவை. அவை தாழ்வான கிளைகளில் இருந்தவாறு காவல் பணிகளில் ஈடுபடுவதாக ஆய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள்

பாடசாலை மாணவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதைத் தடுக்கும் முகமாக கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கவுள்ளன. இதற்காக புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.



இந்த வேலைத்திட்டத்தின்கீழ் நாட்டின் சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் பாடசாலை சிரேஷ்ட மாணவத் தலைவர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோர் அங்கம் வகிக்கின்றனர். இந்தக் குழு மாதத்திற்கொருமுறை கூடி, துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சுற்றறிக்கைமூலம் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

60 Day's BASIC / SPOKEN ENGLISH - தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
7 வயது தொடக்கம் பெரியோர் வரை அனைவருக்கும் என விசேடமாக தயாரிக்கப்பட்ட BASIC / SPOKEN ENGLISH தபால் மூல பாடநெறி
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத,வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
பாடநெறியை தொடரும் உங்களுக்கு
அழகிய T.SHIRT ஒன்று PHONE SIM CARD மற்றும்
30 DAY'S EASY WAY ENGLISH புத்தகம் ஒன்று என்பன
இலவசமாக வழங்கப்படும்
எமது BASIC/SPOKEN / DIPLOMA IN ENGLISH சான்றிதழானது வேலை வாய்ப்பு பெற மற்றும் வெளிநாட்டு தூதரகங்களுக்கு (Embassy) களுக்கு செல்லுடியாகும் இதனால் உங்கள் வெளிநாட்டு பயணங்களுக்கும் VISA பெறவும் இது துணையாக அமையும்.
மேலதிக விபரங்களை பெற பெயர்,முகவரியை தெளிவாக 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பிகளின் ஆரம்பம் எவ்வாறிருந்தது?





இன்றளவில் பலரும் பல்வேறு விதமான முறைகளில், வண்ணங்களில், அளவுகளில் தொப்பிகள் அணிவதைக் காணலாம். எனினும், இத்தொப்பிகளின் ஆரம்பம் எவ்வாறிருக்கக்கூடும் என நீங்கள் சிந்தித்திருக்கலாம். மனிதன் தனது ஆரம்பகாலம், அதற்குப் பின்னரான காலப்பகுதிகளில் அலைந்து திரிந்து உலாவிய பொழுதுகளில் தன்னைக்காத்துக்கொள்ள முற்பட்டான். உடலைப் போர்த்திப் பாதுகாக்குமுன் தலைக்கு ஒரு கவசமிடவே யோசித்தான். அதுவே தொப்பியின் ஆரம்பமாக அமைந்தது. அக்காலப்பகுதிகளில் இலைகுளைகளைக் கொண்டு தலையை மூடிப் பாதுகாத்தான். பண்டைக்காலத்தில் எகிப்து, கிரேக்கம், ரோம் நாகரிகங்கள் தோன்றியபோது, தொப்பிகளும் மனிதர்களுடைய அந்தஸ்துக்கேற்ப மாற்றமடைந்து அணியப்பட்டு வந்தன. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே கம்பளியினால் ஆன தொப்பிகளை அணிந்துள்ள மனிதன் கி.பி.1300 ஆம் ஆண்டிலிருந்து வண்ண, வண்ண அலங்காரம் செய்யப்பட்டுள்ள தொப்பிகளை அணிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்கு ஐரோப்பியப் பெண்கள் அக்காலங்களில் 'டர்பன்' போன்ற தொப்பிகளை அணிந்து அழகு பார்த்தனர். ஒவ்வொரு நாட்டு மக்களும் குறிப்பிட்ட ஒரே வகையான தொப்பிகளையும் அணிந்து வந்துள்ளனர். மேற்கு ஆசியாவில் வாழ்ந்த மக்களோ விளிம்பில்லாத சிவப்பு நிறத்தினாலான தொப்பிகளை அணிந்திருக்கின்றார்கள். பாதிரியார்கள் தங்களை மத ரீதியாக காணப்படுவதற்கு தங்களுக்கென்றே சில நிறங்களினாலான தொப்பிகளையும் அணிந்து வந்துள்ளனர். அரேபியர்கள் தங்களது அந்தஸ்துக்கு ஏற்றாற்போல் டர்பனில் சில உயர்ந்த நகைகளையும் முத்துக்களையும் பொருத்தித் தொப்பிகளை அமைத்தார்கள். அரசன் என அடையாளம் கண்டுகொள்வதற்காக, உயர்ரக ஆபரணங்களைப் பொருத்தி தொப்பிகளை அமைத்தனர். சீனாவில் சூரியன், சந்திரன் போன்ற சின்னங்களைக்கொண்ட அடையாளங்களைப் பொருத்தி தொப்பிகள் அணியப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறான தொப்பிகள் தொழிற்சாலைகளில் உருவாகியது 1851 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள டர்பன் எனும் இடத்தில்தான். பெண்களுக்கு என்று மட்டும் தொப்பிகள் அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் இதே ஆண்டு காலப்பகுதியில் உருவாக்கம் பெற்றுள்ளன.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தொப்பிகள் காலமாற்றதிற்கேற்ப, பல்வேறு வடிவங்களில் உருவாகின. 1920 களில் மணி வடிவில் தொங்கும் தொப்பிகள் தயாரிக்கப்பட்டன. மேலே விளிம்புகள் உள்ள கௌபோய் (Cowboy) தொப்பிகள், 1930 களில் தயாரிக்கப்பட்டு, உலகையே ஆட்டி வைத்தது. இன்றும் கௌபோய் படங்களில் இந்த வகைத் தொப்பிகள் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன. கடந்த பல வருடங்களுக்கு முன்பிருந்தே தொப்பிகளை அழகு செய்து விதவிதமாக அணியும் பழக்கம் ஆரம்பமாகின. பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய நாடுகளைவிட, 1960 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அமெரிக்காவில்தான் ஆண்கள், பெண்கள் என அதிகமானோர் தொப்பிகளை அணிய ஆரம்பித்தனர். ராணுவத்தினர் அணிகின்ற ஒருவகைத் தொப்பிகள் பதினேழாம் நூற்றாண்டிலிருந்தே ஆரம்பமாகின. இன்று ராணுவத்திற்கு ஒருவகை, பொலிஸாருக்கு ஒருவகை, யுத்தத்தின்போது, இன்னொரு வகைத் தொப்பிகள் என இவை பலவாறாக அமைந்திருந்தாலும், இன்றும் கிராமங்களில் வைக்கோல், ஓலைகள் கொண்டு பின்னப்படும் தொப்பிகளுக்கு நகரங்களில் மட்டுமல்லாது; மேற்கு நாடுகளில் கூட நல்ல கேள்வி உண்டு. மேலும், ஜப்பானியர்கள் விருந்தினரைப் பார்க்க அவர்களது வீட்டுக்கு வந்தால் தொப்பிகளைக் கழற்றிக் குனிந்து வணங்குகின்ற ஒரு நாகரிகம் இன்றும் காணப்படுகின்றது. அத்துடன், பொலிஸார், இறந்த உடல்களுக்கு மரியாதை செய்வதற்காக, தொப்பிகளைக் கழற்றும் ஒரு பாரம்பரியமும் காணப்படுகின்றது. எனவே, தொப்பிகள் மனிதர்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்ற ஓர் அணியாக விளங்குகின்றது.











எஸ்.எல்.எம்

# புதிய பெயர் சூட்டிக்கொண்ட நாடுகளும் நகரங்களும்

முற்காலத்தில் வழக்கத்தில் இருந்த சில நாடுகளினதும் நகரங்களினதும் பெயர்கள் பல்வேறு காரணங்களால் பின்னர் பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன. இவற்றில் அதிகமான நாடுகளினதும் நகரங்களினதும் பெயர்களும் எல்லைகளும் 15 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் இருந்து 20ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தால் மாறுபட்டிருந்தன. ஐரோப்பியரின் ஆட்சி நீங்கியபின் பல நாடுகளினதும் நகரங்களின் பெயர்கள் மாற்றம் அடைந்தன. ஐரோப்பியரின் ஆதிக்கத்தில் எவ்வித காரணமும் இல்லாமல் சில நாடுகள் மற்றும் நகரங்களின் பெயர்கள் மாற்றம் அடைந்த வரலாறுகளும் உள்ளன. பொதுவாக முற்காலத்தில் தாம் பெற்றிருந்த பெயர்களை விட்டுவிட்டு, புதிய பெயர்களைச் சூட்டிக்கொண்ட உலகின் சில நாடுகள் மற்றும் நகரங்கள் வருமாறு:

## நாடுகள்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| ஹோலண்ட் | நெதர்லாந்து |
| கலாலிட் நூனாட் | கிரீன்லாந்து |
| கோல்ட் கோஸ்ட் | கானா |
| பிரெஞ்ச் வெஸ்ட் ஆபிரிக்கா | மாலி |
| நிவ் ஸ்பெயின் | மெக்ஸிக்கோ |
| ஃபோர்மோஸா | தைவான் |
| எல்லிஸ் ஐலண்ட் | துவலு |
| எகிப்து | ஐக்கிய அரபு குடியரசு |
| லோரோ சா | கிழக்கு திமோர் |
| கிழக்கு பாகிஸ்தான் | பங்களாதேஷ் |
| டச்சு கயானா | சூரினாம் |
| டச் ஈஸ்ட் இன்டீஸ் | இந்தோனேஷியா |
| டஹோமி | பெனின் |
| கொங்கோ | ஸாயிர் |
| சிலோன் | இலங்கை |
| பர்மா | மியான்மார் |
| பசுட்டோ லேண்ட் | லெசோத்தோ |
| பெச்சுவானா லேண்ட் | பொட்ஸ்வானா |
| பிரிட்டிஷ் ஹொண்டுரஸ் | பெலிஸ் |
| அபிசீனியா | எதியோப்பியா |
| மேற்கு பிரெஞ்ச் ஆபிரிக்கா | மொரிடானியா |
| அப்பர் வோல்ட்டா | புர்கினோ ஃபாஸோ |
| ட்ருஷியல் ஓமன் | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| தங்கனிக்கா மற்றும் சென்ஸிபார் | தன்சானியா |
| ஸ்பெனிஷ் கினியா | ஈக்வடோரியல் கினியா |
| தென்மேற்கு ஆபிரிக்கா | நமீபியா |
| சயாம் | தாய்லாந்து |
| செண்ட்விச் ஐலண்ட்ஸ் | ஹவாய் தீவுகள் |
| ரொடீஷியா | சிம்பாப்வே |
| போர்த்துக்கீஸ் கினியா | கினியா பிஸ்ஸெள |
| பெர்ஷியா | ஈரான் |
| நியாஸாலேண்ட் | மலாவி |
| வட ரொடீஷியா | செம்பியா |
| நிப்போன் | ஜப்பான் |
| மெசப்பத்தோமியா | ஈராக் |
| மான்சூகூ | மஞ்சூரியா |
| மலேயா | மலேசியா |
| மல்காஸி | மடகஸ்கர் |
| கம்பூச்சியா | கம்போடியா |
| நியூ ஹெப்ரிட்ஸ் | வனாட்டு |







## நகரங்கள்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| பத்தேவியா | ஜகார்த்தா |
| அங்கோரா | அங்காரா |
| கிறிஸ்டினா | ஒஸ்லோ |
| கொன்ஸ்தாந்திநோபிள் | இஸ்தான்புல் |
| லியோ போல்ட்வில்லே | கின்சாஷா |
| பீகிங் | பீஜிங் |
| பெட்ரோகிராட் | லெனின் கிராட் |
| ரங்கூன் | யான்கோன் |
| சைகோன் | ஹோ சி மின்சிட்டி |
| சலிஸ்பரி | ஹராரே |
| ஸ்டாலின் கிராட் | வோல்கோ கிராட் |
| கேப் கனவேரல் | கேப் கென்னடி |
| பம்பாய் | மும்பாய் |
| கல்கத்தா | கொல்கொத்தா |
| மெட்ராஸ் | சென்னை |



(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவரையும் நாளைய தலைவராக்கும் பாரிய பொறுப்பை அவர்களின் பெற்றோர்களே கொண்டுள்ளனர். அதன்படி, பெற்றோர்களுக்கும் கல்வி கற்கும் மாணவருக்கும் இடையிலான தொடர்பானது, மாணவர்களின் கல்வியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது





# கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் பெற்றோர்-மாணவர் தொடர்பு

**பெற்றோர்கள் செய்ய வேண்டியவை:**

✱ பெற்றோர்கள் தமது பிள்ளையுடன் சிறப்பான முறையில் நடந்துகொள்ளல் வேண்டும். அவர்களுடன் நட்புடன் பழக வேண்டும்.

✱ மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எது சரி?, எது தவறு? என்பதைப் பகுத்தறிந்து பார்க்க முடியாத நிலையில் காணப்படுவர். அவ்வாறான மாணவர்களைப் பெற்றோர்கள் புரிந்துகொண்டு அவர்களுக்கு நல் வழிகாட்ட வேண்டும். இது அவர்களது வாழ்க்கைக்கு மட்டுமன்றி கல்விக்கும் பயன்படும்.

✱ கல்வி என்பது புத்தக அறிவை மட்டும் ஊட்டுவதன்று. மாறாக, அது மாணவ ஒழுக்கத்தையும் வேண்டி நிற்கின்றது. எனவே, அந்த ஒழுக்கத்தை முதலில் கற்பிக்கும் ஆசானாக பெற்றோர்கள் இருக்க வேண்டும்.

✱ மாணவர்களது கற்றல் நடவடிக்கைகளில் அவர்களது பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிற மாணவர்களோடு தங்கள் பிள்ளைகளை ஒப்பிட்டு அவர்களை குறை கூறுவது கூடாது. இவ்வாறு குறை கூறுவதால் பிள்ளைகளின் கற்கும் ஆற்றல் குறைவடையும். அவர்கள் மறைமுகமாக மன உளைச்சலுக்கும் உள்ளாவர். இது அவர்களைப் பெரிதும் பாதிக்கும்.

✱ தாம் கல்வி கற்கும்போது, அதைப் பெற்றோர்கள் அவதானிக்கின்றனர் என்பதை மாணவர்கள் அறிய வேண்டும். அப்போதுதான் அவர்களின் மனதில் கல்விக்கான ஒத்துழைப்பும் சிறிது பயமும் இருக்கும்.

✱ சிலவேளைகளில் பிள்ளைகள் கவலையுடன் காணப்பட்டால், அவர்களது கவலையை பிள்ளையோடு பிள்ளையாய் இருந்து கேட்டு, அதனைத் தீர்ப்பதற்கு உரிய துணையாக இருந்து, அவர்களை அத்தகைய கவலையிலிருந்து மீட்டெடுத்து கற்றலில் ஈடுபட வைக்க வேண்டும்.

✱ பிள்ளைகளை எந்நேரமும் உறுதியான கட்டுப்பாட்டுக்குள் வைத்தல் கூடாது. அவர்களுக்கு கட்டுப்பாட்டுடனான சுதந்திரத்தையும் வழங்க வேண்டும்.

✱ பாடசாலையில் கற்கும் பருவத்திலிருந்தே, பிள்ளைகளுக்குள் பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

✱ பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெற்று பிள்ளைகள் மனமுடைந்து காணப்பட்டால், அவர்களை அதைரியப்படுத்தாமல், மீண்டும் முயற்சிப்பதற்கான வழிவகைகளைக் கூறவேண்டும்.

✱ தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பது பெற்றோர் ஒவ்வொருவரதும் கடமையாகும். ஆகவே, அவர்களது உடல், உள நலனில் அதிக அக்கறை கொண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் வேண்டும்.

**கல்வி**

**முகாமைத்துவம் - 75**

**கற்றலுக்கான ஆலோசனைகள்**



பிள்ளைகளது சிறப்பான கற்றலுக்காக, பெற்றோர்கள் அவர்களோடு ஒன்றித்து செயற்பட வேண்டும். இதனூடாக, அவர்கள் கல்வியிலும் வாழ்க்கையிலும் சிறந்த இடத்தை அடைவார்கள்.

(தொடரும்)

**-எம்.ஏ.எஃப். சப்ரானா**



நம்மில் சிலர் வளர்ப்புப் பிராணிகளாக முயல், கிளி, மைனா, நாய், பூனை எனக் குறிப்பிட்ட சில விலங்கினங்களை வளர்க்கின்றனர். ஆனால், ஒரு காலத்தில் வளர்ப்புப் பிராணிகளாக தவளைகளும் இருந்துள்ளன என்றால் நம்புவீர்களா...?

# வளர்ப்புப் பிராணிகளாக மாறிய தவளைகள்

1935 ஆம் ஆண்டளவில் அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கரும்புத் தோட்டங்களை ஒரு வகை வண்டுகள் அழித்துக்கொண்டிருந்தன. இது அந்நாட்டின் கரும்புற்பத்தித் தொழிலில் பாரிய நெருக்கடியையும் பின்னடைவையும் ஏற்படுத்தியது. கரும்புத் தோட்ட விவசாயிகள் எத்தனையோ வழிமுறைகளைப் பின்பற்றியபோதும் இந்த வண்டினத்தை அழிக்க முடியாமல் இருந்தது.

இந்நிலையில், 'மெரைன் டோட்' (Marine Toad) அல்லது 'கேன் டோட்' (Cane Toad) என அழைக்கப்படும் தவளை இனம், குறித்த வண்டினத்தை அழித்துவிடக்கூடிய வல்லமை கொண்டதெனக் கரும்புத் தோட்ட விவசாயிகள் கேள்விப்பட்டனர்.

இதனை அடுத்து, கரும்புத் தோட்டக்காரர்கள் பெரிய உருவம் கொண்ட அந்த தவளைகளை வண்டி வண்டியாகக் கொண்டுவந்து தோட்டங்களில் விட்டனர். எனினும், அந்த தவளைகளால் குறித்த வண்டினத்தை அழிக்க முடியாது என்பதை அவர்கள் நாளடைவில் உணர்ந்து கொண்டனர்.



ஏனெனில், வண்டுகள் பெரும்பாலும் கரும்புச் செடிகளின் நுனிப்பகுதியையே தாக்கி வந்தன. பெரிய உடலமைப்பைக்கொண்ட இந்த தவளைகளால் அந்த உயரத்திற்குப் பாய்ந்து வண்டுகளைப் பிடித்து உண்ண முடியவில்லை. அத்துடன், அந்த தவளைகளின் உடலில் இயல்பாகவே நச்சுத்தன்மை காணப்பட்டதனால், முதலைகள், உடும்புகள், பாம்புகள் போன்றன அவற்றை இரையாக்கிக்கொள்வதை தவிர்த்து வந்தன. எனவே, இந்த தவளைகளுக்கு எதிரிகள் என்று எதுவும் இருக்கவில்லை. எனவே, மெரைன் டோட் தவளைகளின் இனப்பெருக்கம் அதிகரித்து, குயின்ஸ்லாந்து மாநிலமெங்கும் ஒரே தவளை மயமானது. தோட்டங்களில் மட்டுமே காணப்பட்ட தவளைகள், நாளடைவில் வீடுகள், தெருக்கள் என எல்லா இடங்களிலும் பரவிவிட்டன. அங்குள்ள எந்தவொரு வீட்டிற்குள் நுழைந்தாலும் அவர்களின் வீட்டு வளர்ப்புப் பிராணிகள் போல இந்தத் தவளைகள் வீட்டிலுள்ளவர்களின் தோளிலும் கழுத்திலும் கைகளிலும் ஏறித் துள்ளிக் குதித்து விளையாடத் தொடங்கின.



எனவே, வேறு வழியில்லாமல் குயின்ஸ்லாந்து மக்களும் அவற்றைத் தமது வளர்ப்புப் பிராணிகளாக ஆக்கிக்கொண்டனர்.

பிற்காலத்தில், Black Kite பறவை, Meat Ant எனும் எறும்பினம், Saw-Shelled எனும் ஆமையினம் போன்றவை இந்த தவளைகளை இரையாக்கிக்கொள்ளத் தொடங்கியதோடு, அறிவியல் ரீதியான ஆய்வு நடவடிக்கைகளினூடாகவும் மெரைன் டோட் தவளைகளின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.



## 'லேட்' வார்த்தையின் பின்னணி

இறந்துவிட்ட ஒருவரைக் குறிப்பிடும்போது, ஆங்கிலத்தில் 'லேட்'(late) என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். இந்த வார்த்தை எவ்வாறு வழக்கத்திற்கு வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

மேலைநாட்டில் இடைக்கால அரசர்களின் அரசாட்சியில்தான் இந்த வார்த்தை தோன்றியது. அங்கு தலைமுறை தலைமுறையாக ஆண்களுக்கு ஒரே பெயர் சூட்டப்படும். அந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்காகவே, இம்முறையைக் கையாண்டார்கள். உதாரணமாக; இரண்டாம் ஜேம்ஸ் அரசர் உயிருடன் இருக்கும்போது, ஏற்கனவே இறந்துவிட்ட அவரது தந்தையைக் குறிப்பிடுவதற்காக 'லேட்' என்ற வார்த்தையைப் பிரயோகித்து 'லேட் கிங் ஜேம்ஸ்' என்று குறிப்பிட்டார்கள்.

இதனடிப்படையில் பயன்பாட்டிற்கு வந்த 'லேட்' என்ற வார்த்தை, பிற்காலத்தில் 'Dead' என்ற வார்த்தைக்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படலாயிற்று. அதாவது, சமூகத்தில் அல்லது குடும்பத்தில் இறந்துவிட்ட ஒருவரை அன்பாகக் குறிப்பிடுவதற்காக, அவரது பெயருக்கு முன் 'Dead' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'late' என்ற வார்த்தை பிரயோகிக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நைல் நதியின் ஆரம்ப

சிக்லிடா மீன்

பேர்டன் மற்றும் ஸ்பெக்கின் வீரப்பயணத்தில்....

## டபோரா

நீண்ட பயணங்களின் பின், பேர்டனும் ஸ்பெக்கும் 1857 ஆம் ஆண்டு நொவெம்பர் மாதம் 7 ஆம் திகதி டபோராவுக்கு வந்து சேர்ந்தனர். டபோராவுக்கு வந்த இவர்களுக்கு நீண்ட ஓய்வு எடுக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அதனால், அவர்களோடு இருந்த சில சுமைதூக்கிகளும் அங்கு வந்தமை குறித்து மிகவும் பூரிப்படைந்தனர். காரணம், அந்நகரம் அவர்களின் பிறப்பிடமாக இருந்தமையாகும். இந்த டபோரா, மத்திய தன்சானியாவின் பெரிய நகரங்களில் ஒன்றாகவும் திகழ்ந்தது. இங்கு வந்தகாலத்தில் மழைக்காலம் ஆரம்பமாகியதால், பேர்டனுக்கும் ஸ்பெக்கிற்கும் நல்ல ஓய்வு எடுக்கும் வாய்ப்புக் கிட்டியது. இத்தகைய காலநிலையினால் கரைப் பகுதிகளை நோக்கிச் செல்லும் அவர்களது பயணம் தாமதமடைந்தது. எனவே, மழைக்காலம் நிறைவடைந்ததும், கரைப்பகுதியை நோக்கிச் செல்லலாம் என அவர்கள் தீர்மானித்திருந்தனர்.

## அரபு மொழியை அறிந்திருந்த பேர்டன்

டபோராவில் பல்வேறு மக்கள் பிரிவினரும் இருந்தனர். அவர்களில் அரேபியர்களே அதிகமாகக் காணப்பட்டனர். பேர்டன் நன்றாக அரபு மொழியைப் பேசக்கூடியவர். முன்னர் அவர் ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் பயணித்திருந்தபோது, அரபு மொழியை உரிய முறையில் கற்றிருந்தார்.

## நாட்டுக்கு நடுவே கடல்

டபோராவில் அவர்களுக்கு ஆச்சரியமான விடயமொன்றை அறிய முடிந்தது. அதுதான் 'நாட்டுக்கு நடுவே கடல் இருக்கின்றது' எனும் தகவலாகும். நைல் நதி ஆரம்பிக்கும் இடத்தைத் தேடி பேர்டனும் ஸ்பெக்கும் பயணிக்க எதிர்பார்த்திருந்ததும் இந்த இடமேயாகும். எனினும், அவர்களது எண்ணம் தவறாகவே இருந்தது. ஏனெனில், நைல் நதி ஒரே இடத்திலிருந்து ஆரம்பமாகிறது என்றுதான் அவர்கள் நினைத்திருந்தனர். ஆனால், நாட்டுக்கு நடுவே கடல் என்பதுபற்றி அரேபியர்கள் வேறொரு கருத்தைக் கூறியிருந்தனர். அதாவது, நாட்டுக்கு நடுவே கடல் எனக் கூறப்படும் இடத்தில், மூன்று கடல்கள் காணப்படுவதாகவும் மேலதிக தகவல்கள் கிடைத்தன. தெற்குப்புறமுள்ள நியாசா கடல், மேற்குப்புறமுள்ள உஜ்ஜி கடல், கிழக்குப்புறமுள்ள உகெரெவே கடல் என்பனவே அவையாகும். எனினும், அவற்றின் எப்பகுதியிலிருந்து நைல் நதி ஆரம்பமாகிறது என்பது பற்றிய சர்ச்சை நிலவியது. அது உகெரெவே கடலிலிருந்தே ஆரம்பமாகியிருக்கலாம் என பேர்டன் கருதினார். அதன்படி, ஆராய்ச்சிக்குழு உகெரெவே கடலை நோக்கிப் புறப்பட்டது.

## புதிய பெயர் பெற்றுள்ள ஏரிகள்

பேர்டனின் ஆராய்ச்சிப் பயணத்தின் போது, டபோராவுக்குள் நீர்நிலை ஒன்று காணப்பட்டது. இது கடல் என்றே அழைக்கப்பட்டது. அதன்மூன்று பகுதிகளைத் தான் நியாசா, உஜ்ஜி, உகெரெவே என அழைத்துள்ளனர். தற்போது அவற்றை விக்டோரியா ஏரி, தங்கனீக்கா ஏரி, மலாவி ஏரி எனக் குறிப்பிடுகின்றனர்.

## தங்கனிக்கா ஏரி

ஆபிரிக்கக் கண்டத்தின் நடுப்பகுதியில் உள்ள பெரிய ஏரி தங்கனீக்கா ஏரியாகும். இது உலகின் பெரிய நன்னீர் ஏரியும் உலகின் இரண்டாவது ஆழமான ஏரியுமாகும். இது புருண்டி, தன்சானியா, செம்பியா, கொங்கோ ஆகிய குடியரசுகளுக்கு சொந்தமானதாகும். 12 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தங்கனீக்கா


டிசம்பர் மாதம் ஆராய்ச்சிக் குழு மேற்கு திசையை நோக்கி செல்லும்போதே ஸ்பெக்கின் பார்வைத் திறன் குறைந்தது. அவர் நோய்வாய்ப்பட்டமையே இதற்குக் காரணமாக அமைந்தது. நாளடைவில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 1858 ஆம் ஆண்டு உஜ்ஜி எனும் நீர் நிலையை நெருங்குகையில் அவரது பார்வைத்திறன் அறவே அற்றுப்போனது. அதன் காரணமாக, அந்த நீர் நிலையையும் அதன் எழிலையும் காணும் பாக்கியம் பேர்டனுக்கு மட்டுமே கிட்டியது






படகு


மீன்பிடித்தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த்தைத் தேடி...



தங்கனீக்கா ஏரி



ஏரி, இந்து மகா சமுத்திரத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. பூகோள மாற்றத்தால் இத்தகைய மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனினும், கடல் ஜீவிகளில் சில, இந்த ஏரியில் எஞ்சி இருந்தன. அதன்படி, கடற்காளான், கடற்பூ, இறால், நண்டு, ஜெலிமீன் மற்றும் பல்வேறு சிக்லிடா மீன்கள் ஆகியவற்றை இன்றும் காணமுடிகிறது. ஆக, ஒன்றுக்கொன்று மாறுபட்ட 250 மீன்வகைகள் இங்கு இருக்கின்றன. அவை கொங்கோ நதியிலிருந்தே அங்கு வருவதாகக் கூறப்படுகின்றது. அவை பல்வேறு அளவுகளிலும் சிறப்புக்களுடனும் காணப்படுகின்றன. நைல் நதியானது, உகெரெவே அல்லது தங்கனீக்கா ஏரியிலிருந்து ஆரம்பமாகுமாயின், அதுபற்றி ஆராயவேண்டுமென ஆராய்ச்சிக் குழுவினர் தீர்மானித்தனர்.

அதன்படி, பல இடையூறுகளையும் இடர்களையும் தாண்டி, பேர்டன்-ஸ்பெக் தங்கனீக்கா ஏரியினை தேடிச்சென்றனர். பலத்த சிரமங்களின் பின் அந்த ஏரியை வந்தடைந்த அவர்கள் பல மாதங்களாக அந்த ஏரியினைப் பரிசீலித்து ஆய்வுகளைச் செய்தனர். இறுதியில் தனது அனுமானம் தவறு என்பதனைப் பேர்டன் உணர்ந்துகொண்டார். இதனால், அவர் பெரும் கவலையுற்றார். எனினும், தங்கனீக்கா ஏரிக்கு மேற்கே உள்ள மலைப்பகுதியில் இருந்து நைல் நதி உருவாகியிருக்கக் கூடும் என்று பேர்டன் ஸ்பெக்கிடம் தெரிவித்தார். உண்மையை அறிந்துகொள்ள கோண்டோ கோராவில் இருந்து நைல் நதியில் முன்னோக்கிச் செல்வோம் என்று அவர் யோசனை தெரிவித்தார். இந்த கோண்டோ கோரா பகுதியானது தென் சூடானில் அமைந்துள்ளது.

## ஸ்பெக்கின் பார்வை குறைதல்

டிசம்பர் மாதம் ஆராய்ச்சிக்குழு மேற்குத் திசையை நோக்கிச் செல்லும்போது ஸ்பெக்கின் பார்வைத்திறன் குறைந்தது. அவர் நோய்வாய்ப்பட்டதனாலேயே இந்நிலை ஏற்பட்டது. நாளுக்கு நாள் அவரது கண்கள் மிகவும் பாதித்தன. முடிவில் உஜ்ஜி எனும் நீர்நிலையை நெருங்கியதும் அவரது பார்வைத்திறன் அறவே அற்றுப்போய்விட்டது. அதனால், அந்த நீர்நிலையையும் அதன் இயற்கை அழகையும் பேர்டனால் மட்டுமே காண முடிந்தது. மேலும், ஸ்பெக்கின் காதுப் பகுதியில் காயம் ஏற்பட்டு அவரின் காது கேட்கும் சக்தியும் குறைவடைந்திருந்தது. நீண்டகால ஓய்வின்பின்னர் அவரின் இக்குறைபாடு தீர்ந்தது.அத்துடன், பலவீனமடைந்திருந்த அவரது பார்வையும் மீளக் கிடைத்து. இதனால், தனது ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட விரும்பினார். இதனையடுத்து, விக்டோரியா ஏரியைத் தேடிச் செல்லும் மர்மங்கள் நிறைந்த ஆபிரிக்க சஞ்சாரம் மீண்டும் ஆரம்பமானது. ஆனால், இப்பயணத்தில் பேர்டன் கலந்துகொள்ள வில்லை.

## விக்டோரியா ஏரி

அதன்படி, 'உகெரெவே' (தற்போதைய விக்டோரியா ஏரி) என்றழைக்கப்பட்ட பாரிய நீர் நிலையைத் தேடிச் செல்வதற்கு ஸ்பெக் முடிவு செய்தார். இப்பயணத்தின்போது, பொருட்களை எடுத்துச் செல்வதற்கு சில உதவியாளர்களை நியமிப்பதற்கு பேர்டன் அனுமதி வழங்கினார். மீண்டும், புதிய பயணம் ஆரம்பமாகியது. திசைகாட்டியினைப் பயன்படுத்தி வடபகுதியினை நோக்கிச் சென்ற ஸ்பெக் தனது உதவியாளர்களுடன் உகெரெவே நீர்நிலையை அண்மித்தார். அதன்பின்னர் விக்டோரியா மகாராணியை கௌரவிக்கும்முகமாக ஸ்பெக், உகெரெவே நீர்நிலைக்கு 'விக்டோரியா ஏரி' எனப் பெயர் சூட்டினார். ஆபிரிக்காவின் மிகப்பெரிய ஏரியாகவும் உலகின் இரண்டாவது பெரிய நன்னீர் ஏரியாகவும் விக்டோரியா ஏரி திகழ்கின்றது. இதன் பரப்பளவு 69,488 ச.கி.மீற்றர்களாகும்.

## ஸ்பெக்கின் தனிப்பயணம்

நைல் நதி விக்டோரியா ஏரியில் இருந்தே தோன்றுகின்றது என ஸ்பெக் கருதினார். எனவே, டபோரா திரும்பியதும் மீண்டும் பேர்டனுடன் நைல் நதியைத் தேடிச்செல்ல ஸ்பெக் எண்ணினார். ஆனால், பேர்டன் ஸ்பெக்குடன் செல்வதற்கு விரும்பவில்லை. அதனால், ஸ்பெக் தனியாகவே தனது தேடுதலை ஆரம்பித்தார். ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு டபோரா திரும்பியவுடன் ஸ்பெக் தான் பெற்ற அனைத்து தகவல்களையும் பேர்டனிடம் தெரிவித்தார். ஆனால், பேர்டன் அதுகுறித்து ஆர்வம் காட்டவில்லை. விக்டோரியா ஏரி கிழக்குப் பக்கமாக அமைந்திருப்பதனால், நைல் நதியின் தோற்றம் அங்கு நிகழ்ந்திருக்க முடியாது என்று பேர்டன் விவாதித்தார். எனினும், பின்னாளில் விக்டோரியா ஏரியே, நைல் நதியின் மூலமாகும் என ஸ்பெக் உறுதிப்படுத்தினார். எனினும், பேர்டன் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

## மீண்டும் பேர்டனுடன் ஸ்பெக்

பேர்டனும் ஸ்பெக்கும் மீண்டும் ஆபிரிக்கக் கரையோரப்பகுதியினை நோக்கித் தமது பயணத்தை ஆரம்பித்தனர். 1859 பெப்ரவரி மாதம் அவர்கள் பெக்மோயோ நகரத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து சென்சிபாருக்கு பயணித்து விரைவில் பிரித்தானியாவுக்குச் செல்வதே ஸ்பெக்கின் திட்டமாக இருந்தது. அதற்கமைய, அவர் பிரித்தானியாவுக்கு சென்றார். ஆனால், பேர்டன் கிழக்கு ஆபிரிக்காவை நோக்கிப் பயணித்தார். அரேபியாவில் ஏடன் நகரில் சிறிது காலம் தங்கி பிரித்தானியா செல்வதற்காகவே அவர் அவ்வாறு பயணித்தார்.


பிரித்தானியாவில் தாம் இருவரும் சந்தித்துக்கொள்ளும்வரை ஆய்வுப் பயணம் குறித்து எவரிடமும் வெளியிட்டப்போவதில்லை என ஸ்பெக்கும் பேர்டனும் ஒருவருக்கொருவர் வாக்குறுதி அளித்துக்கொண்டனர். இதனிடையே, பேர்டன் விக்டோரியா ஏரியினை ஆய்வு செய்ய உடன்படாத காரணத்தினால், ஸ்பெக், பேர்டனுடன் சிறிது மனஸ்தாபம் கொண்டிருந்தார். அதனை அடுத்து அவர்கள் இருவரும் வெவ்வேறாக ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**





செய்மதிப்படம்






தங்கனீக்கா ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெலிஸ்

**அரசு:** இருசட்ட சபைகள்கொண்ட பல கட்சி வரம்புடைய முடியரசு

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து - 1981 செப்டெம்பர் 21.

**தேசிய விடுமுறைதினம்:** சுதந்திரதினமாகிய செப்டெம்பர் 21.

**மேலாட்சி தலைவர்** (1952): இரண்டாம் எலிஸபத் மகாராணி.

**ஆள்பதி** (1993): சேர்.கோல்வில்லே யங்

**பிரதமர்** (1998): டீன்பெர்ரோ.



பெல்மோபன் நாடாளுமன்ற கட்டடம்

## புவியியல்



கராகோல் மாயன் பிரதேசம்

பசுபிக் சமுத்திரத்துடன் தொடர்பில்லாத ஒரு மத்திய அமெரிக்க நாடு. கரீபியன் கடலில் கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் வடக்கில் மெக்ஸிகோ நாடும் மேற்கிலும் வடக்கிலும் குவாதமாலாவும் அமைந்துள்ளன. நாட்டின் பெரும்பாலான பகுதிகள் பெறுமதிமிக்க வன்மரங்களால் நிறைந்த அடர்ந்த காடுகளாக இருக்கின்றன. பெலிஸ் நாட்டின் அதிகளவு நிலப்பரப்பு வெப்பவலய மழைக் காடுகளால் நிறைந்துள்ளது. நியூ ரிவர் இந்நாட்டின் நீளமான நதியாகும். ஹோண்ட், பெலிஸ் என்பன நாட்டின் ஏனைய முக்கிய நதிகளாகும்.

**மொத்தப்பரப்பு:** 8,867 ச.மைல் (22,966 ச.கி.மீற்றர்)

**நிலப்பரப்பு:** 8,803 ச.மைல் (22,800 ச.கி.மீற்றர்)

**நிலப்பிரிவுகள்:** 6 மாவட்டங்கள்.


**உயர்மலைச் சிகரம்:** டொய்லிஸ் டிலைட் (1160 மீற்றர்)

**தாழ்மையம்:** கரீபியன் கடல்.

**மக்கள் தொகை** (2010): 314, 522.









**தலைநகரம்:** பெல்மோபன்.

**பெரிய நகரம்:** பெலிஸ் நகர்.

**நாணயம்:** பெலிஸ் டொலர்.

**மொழிகள்:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வமொழி), ஸ்பெனிஷ், மாயன், கரிஃபுனா.

**இனக்குழுக்கள்:** மெஸ்டிஸோ 48.7%, கிரியோல் 24.9%, மாயா 10.6%, கரிஃபுனா 6.1%, ஏனையவை 9.7%.

**சமயங்கள்** (2000): ரோமன் கத்தோலிக்கம் 50%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 27%, மதமற்றோர் 9%, ஏனையவை 14%.

**எழுத்தறிவு:** 94%.

**இணையத்தளக் குறியீடு:** .bz **தொலைபேசி இலக்கம்:** 501.

**தேசிய கீதம்**

O. Land of the Free by the Carib Sea,
Our manhood we pledge to thy liberty!
No tyrants here linger, despots must flee
This tranquil haven of democracy…. என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

கி.மு.1500 இலிருந்து கி.பி.300 வரை இப்பிரதேசம் முழுவதும் மாயன் நாகரிகம் பரவியது. கி.பி.1502 இல் ஐரோப்பிய நாடுகாண் பயணியான கிறிஸ்டோபர் கொலம்பஸ் இந்நாட்டின் கரையோரத்தை முதன்முதலாக வந்தடைந்தார். 1638 இல் ஆங்கிலேயர்களால் முதன்முதலாக இங்கு ஐரோப்பிய குடியேற்றம் உருவானது. அடுத்த 150 வருடங்களில் பல ஆங்கிலக் குடியேற்றங்கள் நிகழ்ந்தேறின. பின்னர் பெலிஸ் மீது ஆதிக்கம் செலுத்துவதில் ஸ்பானியருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் யுத்தம் மூண்டது. 1798 இல் ஆரம்பமான இந்த யுத்தத்தை 'புனித ஜோர்ஜ் கே யுத்தம்' என அழைப்பர். 1862 இல் பிரித்தானிய முடியின் நேரடி நிர்வாகத்தின்கீழ் வந்தது.

1964 இல் உள்நாட்டு விவகாரங்களில் தன்னாதிக்க அரசாக அங்கீகரிக்கப்பட்டது. 1973இல் 'பிரிட்டிஷ் ஹொண்டுரஸ்' என்ற பெயரை மாற்றி 'பெலிஸ்' என புது நாமம் சூட்டிக் கொண்டது.1981 செப்டெம்பர் 21 ஆம் திகதி இந்நாடு சுதந்திரமடைந்தபோதும், அதன் சில பகுதிகள் தனக்கே உரித்தானது என குவாதமாலா வாதிட்டு வரத் தொடங்கியது. இதனால், குவாதமாலாவுக்கும் பெலிஸ் நாட்டுக்கும் இடையில் சச்சரவுகள் ஏற்பட்டன. எனினும், 1991 இல் குவாதமாலா பெலிஸ் நாட்டின் சுதந்திரத்தை அங்கீகரித்தபோதும், பெலிஸ் நாட்டிற்குரிய நிலப்பரப்பில் பாதிக்கு மேல் தனக்குரியதே என்று தொடர்ந்தும் வாதிட்டு வருகிறது.



தலைநகரின் ஒரு பகுதி



க்றேட் ப்ளூ ஹோல்









தேசிய இலச்சினை



மேலாட்சித் தலைவர்



ஆளுநர்



பிரதமர்

## கலாசாரம்

இங்கு குறிப்பாக; கிரியோல், மாயா, கரிஃபுனா ஆகிய இனக்குழுக்களின் கலாசாரங்களை அதிகம் காணலாம். அத்தோடு, நாட்டின் பெரும்பான்மை இனமாகிய மெஸ்டிஸோ இனத்தவர்களின் கலாசாரமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது தவிர, ஜேர்மனியில் இருந்து வந்து குடியேறிய மென்னோநிட்டிஸ் மக்களின் கலாசாரமும் சீன மற்றும் லெபனானிய கலாசாரத் தாக்கங்களையும் இங்கு அதிகமாக காணலாம்.

## காலநிலை

வெப்பமான கோடைகாலம் உட்பட, பொதுவாக வருடம் முழுவதும் இதமான காலநிலை நிலவுகின்றது. வருடத்தில் ஜூன் முதல் டிசம்பர் வரை மழைக்காலமாகும். ஜனவரி முதல் மே வரை கோடைகாலமாகும். வருடாந்தம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் நிலைகொண்டு வீசும் புயல்காற்றினால் பெலிஸ் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2003): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 33,300; செல்லிடத் தொலைபேசிகள்: 60,400. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 1, FM 12. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 2. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 2613; இணையத்தளப் பாவனையாளர்கள்: 30,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 2,872 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2004): 825 கி.மீற்றர். **துறைமுகம்:** பெலிஸ் நகர். **விமான நிலையங்கள்** (2004): 43.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 3.05%): வாழை, கொக்கோ, கரும்பு, மீன், புடவைகள். **கைத்தொழில்கள்:** ஆடைக்கைத்தொழில், உணவுற்பத்திப் பொருட்கள், சுற்றுலாத்துறை. **இயற்கை வளங்கள்:** உயிரியல் தாவரங்கள், பெறுமதிமிகு மரங்கள், மீன், நீர்மின் வலு. **ஏற்றுமதிகள்** (2009): சீனி, வாழை, சிட்ரஸ், புடவை வகைகள், மீன் உற்பத்திப்பொருட்கள், மரத்தளபாடங்கள். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்களும் போக்குவரத்து சாதனங்களும், எரிபொருட்கள், ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2009): ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், ஜமெய்க்கா, மெக்ஸிகோ, குவாதமாலா, கியூபா, சீனா, ஜப்பான்.



க்சுனான்டுனிச் மாயன் இடிபாடுகள்



எக்டன் டியுனிச்சில் முக்னல் குகை

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில

- க்றேட் ப்ளூ ஹோல்
- கராகோல் மாயன் பிரதேசம்
- சுனன்டுனிச் மாயன் இடிபாடுகள்
- எக்டன் டியுனிச்சில் முக்னல் குகை
- பெலிஸ் விலங்கினக் காட்சிசாலை



நியூ ரிவர் (பெலிஸ் நாட்டின் நீளமான நதி)




கியுகம்பர் கடற்கரை

அம்பேக்ரிஸ் கடற்கரை

பெலிஸ் சர்வதேச விமானநிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் நினைவாடல்களை நினைவுகூறும் 'உலக ஆசிரியர் தினம்'









## ஆசிரியர் சேவை

ஆசிரியர் எனும் சொல்லுக்கு யுனெஸ்கோ சாசனத்தில், 'பாடசாலையில் மாணவ-மாணவியரின் கல்வி தொடர்பான பொறுப்பினைத் தாங்கும் அனைவரும் ஆசிரியர்' எனக் கூறப்பட்டுள்ளது. ஆசிரியர் பணியானது மிகவும் கௌரவத்திற்குரியது. கல்வியின் மூலம் சிறந்த நற்பிரஜையை உலகிற்கு வழங்கிவரும் பாடசாலையினது (வகுப்பறை) கல்வி முகாமையாளரான ஆசிரியரானவர் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து சேவையாற்றுவதன் காரணமாக இன்று 'ஆசிரியர் சேவை' என அழைக்கப்படுகின்றது. இச்சேவைகளை மதித்து உலகம் போற்றும் உத்தமர்கள் வரிசையில் ஆசிரியர் சமுதாயமும் இணைந்து சர்வதேச தினங்களில் ஆசிரியப் பெருந்தகைகளை போற்றி வாழ்த்திடவும், ஆசிரியர் சமூகத்திற்கான ஒரு சர்வதேச தினத்தை ஒதுக்கி அழகுபார்க்கின்றது மனித சமுதாயம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இன்று சுமார் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ சமுதாயத்தின் எதிர்கால நல்வாழ்க்கையை தீர்மானிக்கின்ற அல்லது நல்வழிப்படுத்துகின்ற புனிதமான பணியில் சுமார் இரண்டு லட்சத்து இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், பத்தாயிரத்திற்கு அண்மித்த தொகையைக்கொண்ட பாடசாலைகளில் சேவையாற்றி வருகின்றனர். நமது நாட்டில் காணப்படுகின்ற தொழில்களுள் பாரியளவிலான மனித வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள துறையினராக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர்.

## ஆபிரஹாம் லிங்கனின் கடிதம்

ஒரு பிள்ளையின் வாழ்வை உயர்த்தவும், தாழ்த்தவும் ஆசிரியரால் முடியும் என்பதை அன்று அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரஹாம் லிங்கன் தனது மகன் படிக்கின்ற பாடசாலையின் அதிபருக்கு எழுதிய புகழ்பெற்ற கடிதத்தில் எழுதப்பட்டுள்ள வாசகம் மிகவும் பெறுமதியானது. அதாவது; "மனிதர்களில் யாவரும் உண்மை கூறுபவர்களாயும் நீதி, நியாயம் உள்ளவர்களாயும் நடந்துகொள்ளமாட்டார்கள் என்பதை எனது புதல்வருக்கு சொல்லிக் கொடுங்கள். ஒவ்வொரு சோம்பேறிகள் இருக்கின்ற இடத்திலும் சான்றோரொருவர் இருக்கின்றார் என்பதையும் பகைவர்கள் இருக்கின்ற இடங்களில் நண்பரொருவர் இருக்கின்றார் என்பதையும் இலவசமாக கிடைக்கும் பணத்தைக்காட்டிலும் வியர்வை சிந்தி உழைக்கும் பணம் பெறுமதி வாய்ந்ததென்பதையும் எனது புதல்வருக்கு கற்றுக்கொடுங்கள். இந்த உண்மை அவருக்குப் புகட்டுவதற்குச் சிலகாலம் செல்லுமென்பதை நான் அறிவேன். ஆயினும், உண்மையினை அவருக்கு உபதேசியுங்கள்" என்று லிங்கன் எழுதிய அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "தமக்கு ஏற்படும் அமைதியின்மையினை அவர் நெஞ்சுறுதியோடு தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.





அஞ்சாநெஞ்சம் உடையோருக்கு தேவையான பொறுமை அவருக்கு இருத்தல் வேண்டும் எனவும், அதிபராகிய உங்களால் இயன்ற அனைத்தையும் எனது புதல்வரின் நன்மைக்காக செய்யுங்கள். அதற்கேற்ப மனவுறுதியும் உடலுறுதியும் பெறுவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்பதாகவும் கூறப்பட்டிருந்தது. அதிபர், ஆசிரியரில் பற்றுறுதி வைத்து தனது [illegible] ஆசிரியர், பாடசாலையின் கற்றல் கற்பித்தல் போன்றன எவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெற்றுள்ளது எனவும் பிள்ளையின் வாழ்வின் மலர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் உறுதுணையாக ஆசிரியத்துவம் துணைசெய்கின்றது என்ற உண்மையை அன்று லிங்கன் உணர்த்தியிருந்தார் என்பதையே அவரது கடிதம் சுட்டிக் காட்டுகின்றது.

## தத்துவஞானிகளின் கூற்று

தத்துவஞானியான ரூசோ, "ஒரு பிள்ளையை தன் வாழ்நாளில் ஒருபோதும் அடைய முடியாத குறிக்கோள்களுக்காக வருத்தி பற்பல கஷ்டங்களுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தி, நிலையற்றதோர் எதிர்காலத்திற்காக அப்பிள்ளையின் நிகழ்காலத்தை அர்ப்பணம் செய்வது கொடூரமானது" என கூறுகின்றார். இதன்மூலம் பிள்ளைகளை வருத்துவதை விட்டு விட்டு இயற்கையோடு அவர்கள் தாமாகவே தத்தமது இயல்புகளுக்கேற்றவாறு கல்வியறிவைப் பெறுவதற்கு ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும். "கற்கின்றோம் என்பதை விட நாம் அனுபவத்தைப் பெறுகின்றோம் என்பதுதான் சிறந்த கல்வியாகும்" என அனுபவக்கல்வியின் தந்தையான ஜோன் டூயின் கூறுகின்றார். இதனையே மாணவர் சமூகம் ஆசிரியர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (UNESC) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆகியன 1994 ஆம் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய, 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி உலக ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதியே ஆசிரியர் தினமாகப் பிரகாடனப்படுத்தப்பட்டுள்ளது

## ஆசிரியர் அந்தஸ்து

1996 இல் ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச கல்வி மாநாட்டில் ஆசிரியர்களினது வேலைகளுக்குரிய நிபந்தனைகள், சம்பளங்கள், தகுதி, அவர்களது ஏனைய விடயங்கள் பற்றியெல்லாம் எடுத்தாளப்பட்டு சமுதாயத்தில் ஆசிரியர்களினது அந்தஸ்தினை அதிகரிப்பதற்கு சர்வதேச மட்டத்திலான பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டு, ஆராயப்பட்டு 'ஆசிரியர் அந்தஸ்து' பற்றிய விதந்துரைகளும், பிரகடனங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

## நல்லாசிரியர்

எந்தத் தொழிலுக்கும் மூலாதாரமாய் அமைகின்ற ஆசிரியர்களை நினைவுகூறுகின்ற ஆசிரியர் தினத்தில் நல்லாசிரியர் என்பவர் பின்வரும் பண்புகளைக் கொண்டவராக காணப்படுகின்றார். 'அதிபரோடு ஒத்துழைப்பவர், ஆசிரியர் குழாத்தோடு சிறந்த தொடர்பினை கொண்டவர், மாணவர்களின் சிறந்த ஆலோசகர், கற்பித்தலை ஆயத்தத்துடன் மேற்கொள்பவர், தமது தொழில்சார் திறன்களை மேம்படுத்த முனைபவர், மாணவர் மற்றும் பாடசாலையின் விருத்திக்காக உயர் அர்ப்பணிப்புகள் செய்பவர் போன்ற பல்வேறு கருமங்களில் தன்னை ஈடுபடுத்துகின்ற போது, அவர் சிறந்த ஆசிரியராகச் சமுதாயத்தில் மிளிர்கின்றார். அவ்வாறான திறமைகளைப் பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் பாராட்டி கௌரவப்படுத்துவது சாலச் சிறந்தது.

வெறுமனே புத்தகத்தை மாத்திரம் நம்பியிராது கற்றல்மூலம் பல்வேறு நவீனத்துவமிக்க கருத்துக்களைப் புகட்டுவதற்கும் அறிந்துகொள்வதற்கும் வழிசமைத்தல் ஆசிரியரின் பணியாகும். பேராசிரியர் டி.கே.ஓகொணர் அவர்கள் கூறுவதுபோல, 'சமுதாயத்தில் தம் பங்கினை அளிக்கும் பொருட்டு, மேலதிக அறிவினை மீண்டும் விரும்பிப் பெறும் வகையில் ஆண்-பெண் இருபாலாருக்கும் தேவையான ஆகக் குறைந்த அடிப்படைத் திறனையாவது அளித்தல்' கல்வியின் நோக்கங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் பிள்ளைகளை சமூகப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜையாக தோற்றுவிப்பதுடன், அவர்களை உயர்தொழிலுக்கான தகைமைகளைப் பெறவும், கல்வியறிவு, நற்குணம், ஆளுமை போன்றவற்றை அவர்களிடம் வளர்த்தெடுப்பதும் ஆசிரியர்களது மிகச் சிறந்த பணிகளாகும்.

எஸ்.எல்.மன்சூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: .................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் பாடலை வாசித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வண்ண வண்ணக் குடைகள்
அழகாய் அமைந்த குடைகள்
நிழலைத் தரும் குடைகள்
நிமிர்ந்த விரிந்த குடைகள்

வெயிலுக்கு ஏற்ற குடைகள்
வெம்மை தணிக்கும் குடைகள்
மழைக்கு ஏற்ற குடைகள்
மயக்கும் அழகுக் குடைகள்

சிறுவர் விரும்பும் குடைகள்
சின்னஞ் சிறிய குடைகள்
பெரியோர் விரும்பும் குடைகள்
பெறுமதி மிக்க குடைகள்

வி.என்.எஸ்.உதயச்சந்திரன்
நன்றி: பாட்டும் படமும்

1. இப்பாடலில் எதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது? ..........
2. அழகு என்பதன் ஒத்தசொல்லைத் தருக. ..........
3. வெம்மை என்பதன் எதிர்ச்சொல்லைத் தருக. ..........
4. இப்பாடலில் உள்ள அடுக்குமொழி ஒன்று தருக. ..........
5. இங்குள்ள உயர்திணைச் சொல் ஒன்று தருக. ..........
6. இப்பாடலில் உள்ள அடுக்கிடுக்கித் தொடர் ஒன்று தருக. ..........

02) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1. இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியில் / மரங்கள் / நின்றன
..........
2. நின்றனர் / எல்லோரும் / வானத்தைப் / கொண்டு / பார்த்துக்
..........

03) பின்வரும் மரபுத்தொடரின் உட்கருத்தை எழுதுக.

1. பூசி மெழுகுதல்: ..........
2. நுனிப்புல் மேய்தல்: ..........

04) பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்: ..........

05) பின்வரும் தொடர்மொழியின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல் (ஒருமொழி) எழுதுக.

1. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை: ..........
2. அகரவரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறுவது: ..........

06) பின்வரும் உவமைத்தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.

1. நீரின் மேல் எழுத்துப் போல: ..........
2. நகமும் சதையும் போல: ..........

07) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

1. நாம் சிறு வயதிலிருந்தே நல்ல .......... பழகுதல் வேண்டும்.
(பலக்கங்களைப்/பழக்கங்கலைப்/பளக்கங்களைப்/பழக்கங்களைப்)
2. அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும் ..........
(இறங்கினர்/இரங்கிணர்/இரங்கினர்/இறங்கிணர்)

08) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை எழுதுக.



1. This is my ..........
2. வாழைப்பழம் என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
..........

09) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

- தயவு செய்து என்னை மன்னியுங்கள்: ..........

10) பின்வரும் ஆங்கில வாக்கியம் குறிக்கும் கருத்தை தமிழில் எழுதுக.

Whose book is this? ..........

11) இதன் கருத்தைத் தமிழில் எழுதுக.

தே (B) பொன்ன: ..........

12) 'வாசியுங்கள்' என்னும் சொல்லுக்கான சிங்களச் சொல்லை தமிழில் எழுதுக.

..........

★ *13 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

13) வேரில் உணவு சேமிக்கும் தாவரம் எது?

1. மரவள்ளி 2. தென்னை 3. அகத்தி 4. பலா

14) தாவர இலைகளில் கூடு கட்டும் பிராணி எது?

1. குயில் 2. இராமபாணம் 3. செவ்வெறும்பு 4. கோழி

15) 
இவ்வுருவில் உள்ள தாவரம்;

1. சதை கரைச்சான் 2. ஊமத்தை
3. பிரண்டை 4. குன்றிமணி




16) வீட்டில் இயற்கையாகக் காணப்படும் பிராணி எது?

1. ஆடு 2. பூனை 3. பல்லி 4. நாய்

17) சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மைகொண்ட பிராணி எது?

1. மாடு 2. முயல் 3. குரங்கு 4. நாய்

18) கூர்மையான கண்களை உடைய பறவை எது?

1. பருந்து 2. மயில் 3. தீக்கோழி 4. வெளவால்

19) இலங்கையின் மேற்குத் திசையில் காணப்படுவது;

1. இந்தியா 2. மலேசியா 3. ஆபிரிக்க நாடுகள் 4. தாய்லாந்து

20) இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?

1. தியலும 2. லக்ஷபான 3. பம்பரகந்த 4. துன்ஹிந்த

21) தேசப்படத்தில் மலைத்தொடரைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?

1. நீலம் 2. கபிலம் 3. சிவப்பு 4. கறுப்பு

22) பேரூந்து ஒன்றில் உள்ள சக்கரங்களின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 4 3. 6 4. 10

23) நுளம்பினால் ஏற்படும் நோய் அல்லாதது எது?

1. டெங்கு 2. மலேரியா 3. சிக்குன்குன்யா 4. கழிச்சல் நோய்

24) இரவில் வானத்தை அவதானிக்கும்போது, பல உடுக்கோலங்களைக் காணலாம். கீழே காணப்படும் உடுக்கோலங்களில் பெருங்கரடி உடுத்தொகுதி எது?




25) அமாவாசையிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் வானில் காணப்படும் சந்திரனின் வடிவம்;





26. மின்சாரத்தால் தாக்குண்ட ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்யவேண்டிய மிகப் பொருத்தமான செயல் யாது?


1. நீர் அருந்தக் கொடுத்தல் 2. மின் தாக்குண்டவரைத் தொடுதல்
3. உடனடியாக ஆளியை நிறுத்துதல் 4. கைமருந்து போடுதல்

27) 

இம்மேசைத்தட்டை உருவாக்குவதற்கு A என்னும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வட்டத்தின் ஓரத்தைத் தைப்பதற்குப் பயன்படும் தையல் முறை யாது?




28) கண்ணாடிப் பாத்திரமொன்றில் பனிக்கட்டி ஒன்றை இட்டு அப்பாத்திரத்தில் பனிக்கட்டியின் அமைவை சரியாகக் காட்டும் உரு எது?





29) அரச இலச்சினையில் நெற்கதிர்கள் வெளிப்படுத்துவது;

1. தார்மீகம் 2. தன்னிறைவு 3. சௌபாக்கியம் 4. நிலைத்திருப்பவை

30) 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டிகள் எந்த நாட்டின் தலைநகரில் நடைபெறவுள்ளன?

1. எதென்சில் 2. பீஜிங்கில் 3. லண்டனில் 4. பெரிஸில்

31) 

இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி வேலைசெய்வோர் யாவர்?

1. மின்வேலை செய்வோர் 2. தோட்டவேலை செய்வோர்
3. தச்சுவேலை செய்வோர் 4. கட்டட வேலை செய்வோர்

32) சூரியக் குடும்பத்தின் பெரிய கிரகமாக (கோளாக) விளங்குவது எது?

1. சனி 2. செவ்வாய் 3. வெள்ளி 4. வியாழன்

33) 
இக்குறியீட்டின்மூலம் விளங்குவது எது?

1. சரணாலயம் 2. தொடர்பாடல்
3. சமாதானம் 4. பாதுகாப்பு

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் சேவையின் ஆரம்பமும் வளர்ச்சியும்

*வரலாற்றில் ஆதிகாலம் தொட்டே செய்திகளை பரிமாறிக்கொள்வதற்காக மனிதன் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டான். செய்திகளை பரிமாறிக்கொள்ளும்போது, 'தபால்' எனும் எண்ணக்கரு எகிப்திய நாகரிகத்தின்போதே (கி.மு.4000–2500 வரை) அறிமுகமானது. இதற்காக சித்திர எழுத்துக்களைப் பதித்துக் களிமண் தட்டுக்களில் செய்திகளைப் பரிமாறியுள்ளனர். பிற்காலத்தில் கல்வி, போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் செய்திப் பரிமாற்றத்திலும் அபிவிருத்தி ஏற்பட்டது. செய்திப் பரிமாற்ற வரலாற்றில் அஞ்சல் சேவைக்கு நீண்ட வரலாறு உள்ளது. அதன்படி, அஞ்சல் சேவையின் ஆரம்பம், வளர்ச்சி மற்றும் இலங்கையில் அஞ்சல் சேவை என்பன பற்றி நோக்குவோம்*




உலக அஞ்சல் சங்கத்தின் இலச்சினை







## உலக அஞ்சல் தினம்

அஞ்சல் சேவையினூடாக இவ்வுலகை ஒரே கிராமமாக ஒன்றிணைத்த பெருமை உலக தபால் சங்கத்தையே (Universal Postal Union) சாரும். 1874 இல் சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் நிறுவப்பட்ட உலக அஞ்சல் சங்கத்தின் நிறைவு தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக, 1969 ஆம் ஆண்டு ஜப்பானின் டோக்கியோ நகரில் ஒன்றுகூடிய உலக அஞ்சல் சங்க மாநாட்டின்போது, உலக அஞ்சல் சங்கத்தின் நிறைவுநாளான ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி உலக அஞ்சல் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

இவ்வாறு ஆரம்பமான உலக அஞ்சல் தினமானது உலக நாடுகளில் பல்வேறு விதங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றது. இத்தினத்தில் அஞ்சல் துறையில் பல்வேறு புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய தபால் தயாரிப்புக்கள் வெளியிடப்படுவதோடு, புதிய சேவைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அத்துடன், விசேட அஞ்சல் தின வைபவங்களும் பணியாளர்கள் கௌரவிப்புக்களும் நடைபெறுவதுண்டு.



## உலக அஞ்சல் சங்கம்

உலக நாடுகளுக்கிடையேயான அஞ்சல் சேவையானது, உலக அஞ்சல் சங்கத்தின் மூலமாகவே நடைபெறுகின்றது. ஆரம்பகாலத்தில் 'பொது அஞ்சல் சங்கம்' என்ற பெயரில் நிறுவப்பட்ட உலக அஞ்சல் சங்கமானது, 1874 ஒக்டோபர் 9 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 'பேர்ன்' உடன்படிக்கையின் பின்னர், 'உலக அஞ்சல் சங்கம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1969 ஆம் ஆண்டளவில் இச்சங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நிறுவனமாகப் பரிணாமம் பெற்றது. உலக அஞ்சல் சங்கத்தில் 1974 ஆம் ஆண்டு இலங்கை அங்கத்துவம் பெற்றது.

முழு உலகையும் தொடர்புபடுத்தி பௌதிக (கடிதம் மற்றும் பொதிகள்), நிதி (காசுக்கட்டளை, முத்திரை, பணக்கொடுப்பனவு போன்றவை) மற்றும் இலத்திரனியல் (மின்னஞ்சல், தொலைநகல், இணையத்தளச் செயற்பாடுகள்) என மூவிதங்களிலான பொருள் மற்றும் சேவைகளை உலக அஞ்சல் வலைப்பின்னலானது நாடுகளுக்கிடையே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் தபால் சேவையின் ஆரம்பம்

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலேயே இலங்கையில் அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 17ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியிலேயே இச்சேவை ஆரம்பமாகியது. ஏற்கனவே ஒல்லாந்தர் தமது குடியேற்ற நாடுகளிடையே செய்திகளையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்வதற்காக விசேட படகுச் சேவையொன்றை ஆரம்பித்திருந்தனர். அச்சேவை 'பெக்கட் படகுச் சேவை' என்று அழைக்கப்பட்டது. கடல் மார்க்கமாகவே அப்படகுச் சேவை நிகழ்ந்தது. ஒல்லாந்தரின் ஆட்சியதிகார எல்லை விரிவடைந்ததையடுத்து, அவர்கள் முதன்முதலாகக் கொழும்பு, காலி, திருகோணமலை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அஞ்சல் அலுவலகங்களை நிறுவினர்.



கி.பி.1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஒல்லாந்தரிடம் இருந்து பிரித்தானியரின் கைகளுக்கு மாறியது. பிரித்தானியர்களால் இந்நாட்டின் முதலாவது அஞ்சல் மாஅதிபராக கெப்டன் கென்னடி நியமிக்கப்பட்டார். கி.பி.1815 இல் கண்டி ராச்சியம் கைப்பற்றப்பட்டு முழு இலங்கையும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. அதன்பின்னர் இலங்கையில் பெருந்தோட்டங்கள் ஆரம்பமாகியதோடு, அஞ்சல் சேவையின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டது. எனவே, பிரித்தானியர்கள் இலங்கையில் பல பாகங்களிலும் அஞ்சல் அலுவலகங்களை அமைத்ததோடு, அஞ்சல் சேவையை வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றியமைத்தனர். இலங்கையின் தபால் மாஅதிபராகக் கடமையாற்றிய முதலாவது இலங்கையர் என்ற பெருமைக்குரியவராக வாசல முதலி ஏ.ஜி.திலகரத்ன திகழ்கின்றார்.

## சமுத்திரங்களையும் கடந்துசென்ற அஞ்சல் சேவை

நாடுகாண் பயணங்கள், கைத்தொழில்புரட்சி, சர்வதேச வர்த்தகம், சுற்றுலாத்துறை ஆகியவற்றில் ஏற்பட்ட அதி விரைவான வளர்ச்சியானது கடல் வழி அஞ்சல் முறை ஆரம்பமாவதற்கு பிரதான காரணங்களாக விளங்கின. கடல்வழி அஞ்சல் சேவை ஆரம்பமாகிய போது, பிரித்தானியர்கள் அதற்காக வர்த்தக கப்பல்களையே பயன்படுத்தினர். 1850 ஆம் ஆண்டளவிலேயே அஞ்சல் சேவைகளுக்கென்று பிரத்தியேகமான கப்பல்கள் ஈடுபடுத்தப்படலாயின. கடல்வழி அஞ்சல் சேவையை நடைமுறைப்படுத்துவதற்காக பிரத்தானியர்கள் முதன் முதலாக ஓரியண்டல் ஸ்டீம் நெவிகேஷன் எனும் கப்பல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர். இலங்கையும் பல்வேறு கப்பல் நிறுவனங்களுடன் இணைந்து கடல்வழி அஞ்சல் சேவைகளை மேற்கொண்டது.



## இலங்கையில் தபால் போக்குவரத்து

ஆரம்பகாலத்தில் இலங்கையில் உள்நாட்டு அஞ்சல் சேவைகளில் மாட்டுவண்டி, குதிரை வண்டி, ரிக்ஷோ, துவிச்சக்கர வண்டி என்பன ஈடுபடுத்தப்பட்டன. பிற்காலத்தில் மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், விமானங்கள் என்பன அஞ்சல் சேவையில் இணைந்துகொண்டன.



## வான் கடித சேவை

1920 ஆம் ஆண்டளவில் பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் விரைவான அஞ்சல் போக்குவரத்து சேவைக்காக விமானங்களைப் பயன்படுத்தின. 1937 இல் பிரித்தானியாவானது, ஐரோப்பா மற்றும் ஆசியாவிலுள்ள நகரங்களுக்கிடையிலான அஞ்சல் சேவையை ஆரம்பித்தது. இதற்காக 'எம்பயர் எயா மெய்ல் சேவை' எனும் நிறுவனத்தைத் தாபித்தது. இலங்கையில் விமான அஞ்சல் சேவைக்காக 1935 ஆம் ஆண்டு ரத்மலானை விமான நிலையம் அமைக்கப்பட்டது. 1936 ஆம் ஆண்டு இந்தியாவின் டாட்டா (TATA) நிறுவனத்திற்குச் சொந்தமான விமானமொன்று கராச்சியில் இருந்து கிறிஸ்மஸ் தபால்களை எடுத்துக்கொண்டு ரத்மலானை விமான நிலையத்தில் தரை இறங்கியது. இதுவே இந்நாட்டின் முதலாவது வான் அஞ்சல் சேவையாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், எயார் சிலோன் விமான நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்மூலம் இலங்கையில் விமான அஞ்சல் சேவை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் இலங்கை பல்வேறு விமான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு நாடுகளுடன் விமான தபால் சேவையை பரிமாறிக்கொண்டது.



**இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் அற்புதப் பை

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் நிகழ்காலத்தில் மனிதனால் வானுயர்ந்த கட்டடங்கள் கட்டப்படுகின்றன; விதவிதமான நிர்மாணங்கள் படைக்கப்படுகின்றன. தற்காலத்தில் பலதுறைகளிலும் காணப்படும் முன்னேற்றங்களின் அடிப்படையில் இவையெல்லாம் சாத்தியப்பட்டாலும் புராதன காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்கள், நினைவுச்சின்னங்கள், தூபிகள் உட்பட, பல்வேறு சாதனைகளைப் பார்க்கும்போது, அன்று அதனை நிர்மாணித்தவர்கள் நவீன உலகத்தில் பல்வேறு வசதிகளுடன் வாழும் மனிதனுக்கு எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்பது புலனாகின்றது. அதன்படி, ஐரோப்பாவில் அமைந்துள்ள புகழ்பெற்ற புராதன படைப்புகள் சிலவற்றை நோக்குவோம்.

## பைஸா நகரின் சாய்கோபுரம்



1173 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9 ஆம் திகதி வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டி முடிக்கப்பட்ட பைஸா நகரத்தில் அமைந்துள்ள சாய்ந்த கோபுரம், காலத்திற்குக் காலம் சாய்ந்து வந்தமையே அதன் உலகப் புகழுக்கு காரணமாகும். வட்டவடிவத்தில் எட்டு அடுக்கு மாடிகளைக்கொண்ட இக்கோபுரம், 180 அடி உயரமானதாகும். அக்காலத்தில் ராணுவத்தின் வெற்றியைக் கொண்டாடும் விதத்தில் இது கட்டப்பட்டது. இதன் அடிவாரத்தின் விட்டம் 52 அடியாகும். இக்கோபுரம் கட்டிமுடிக்கச் சுமார் 200 வருடங்கள் சென்றதாக கூறப்படுகின்றது. இந்தக் கோபுரத்தில் 294 படிக்கட்டுகள் உள்ளன. 5.5 பாகை கோணத்தில் கோபுரம் சாய்ந்து வந்தது.எனவே, 1990, ஜனவரி மாதம் 7 ஆம் திகதி பொதுமக்கள் பார்வையிட முடியாதபடி இக்கோபுரம் மூடப்பட்டது. சீரான புனர்நிர்மாணப் பணிகளின் பின்னர் 2001 டிசம்பர் 15 ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டது. அத்துடன், கடந்து வந்த 800 ஆண்டுகளின் பின்னர் தற்போது முதற்தடவையாக பைஸா கோபுரம் சாய்வதை நிறுத்திக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கொலோசியம்

புராதன ரோம் நகரின் மத்தியில் கட்டப்பட்ட ஒரு கட்டடம்தான் கொலோசியம். இது ஒரு மாபெரும் காட்சியரங்கமாகும். ரோமானிய பேரரசர்களின் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களிலேயே கொலோசியம் மிகப் பெரியது. அன்று 'ஃபிளேவியன் எம்ஃபிதியேட்டர்' (Flavian Amphitheatre) என அழைக்கப்பட்ட இம்மண்டபம், இன்று 'கொலோசியம்' என அழைக்கப்படுகின்றது. இம்மண்டபம் மனிதனும் விலங்கும் சண்டை இடுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு மோதல் மைதானமாகும். அத்தோடு, அன்று ரோமாபுரியை ஆட்சிபுரிந்த பேரரசர்களால் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இழைக்கப்பட்ட கொடூரமான தண்டனைகளை ஞாபகப்படுத்தும் களமாகவும் இது திகழ்கின்றது.



கி.பி.80 ஆம் ஆண்டளவிலேயே இந்த மைதானமும் அதனைச் சுற்றியுள்ள மண்டபமும் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. இம்மண்டபத்தின் உட்பகுதியில் உள்ள அடுக்கு வரிசைகளில் சுமார் 50,000 பேர் அமர்ந்து காட்சிகளைக் கண்டுகளிப்பதற்கு ஏற்ற வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் வாள்போர், மல்யுத்தம் என்பனவும் விலங்குகளின் சண்டைகளும் இங்கு இடம்பெற்றுள்ளன. நீரோ என்ற (கி.பி.37-68) பேரரசனின் ஆட்சிக்காலத்தில் காலத்திற்கு காலம் கிறிஸ்தவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு கொலோசியத்தின் மத்திய பகுதிக்குள் தள்ளப்பட்டு அங்கிருந்த சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டனர்.

500 ஆண்டுகள் அதாவது 6 ஆம் நூற்றாண்டுவரை பாரம்பரிய விளையாட்டுகள் மட்டுமே கொலோசியத்தில் விளையாடப்பட்டு வந்தன. கி.பி.6 ஆம் நூற்றாண்டில் சிறிய கிறிஸ்தவ தேவாலயமொன்று கொலோசியத்திற்குள் கட்டப்பட்டது. இன்றைய காலத்தில் ரோம் நகரின் முக்கியமான சுற்றுலாத் தலமாக கொலோசியம் திகழ்கின்றது. 189 மீற்றர் நீளமும் 156 மீற்றர் அகலமும் உடைய கொலோசியம் மண்டபமானது, 6 ஏக்கர் நிலப்பரப்பில் பிரமாண்டமாக அமைந்துள்ளது.

## உலகின் மிகப்பெரிய




இத்தாலி நாட்டின் ஒரு பகுதியில் அமைந்
மிகச் சிறிய சுதந்திர நாடாகிய வத்திக்கானி
மிகப்பெரிய கிறிஸ்தவ தேவாலயமாகிய பு
யம் அமைந்துள்ளது. 'பெசிலிகா' என்றும் அ
இத்தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் இ
வேறொரு கிறிஸ்தவ தேவாலயம் அமைந்
நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். புனித பே
(இராயப்பர்) மரணமடைந்த காலகட்டத்தில்
பேரரசரால் இத்தேவாலயம் கட்டுவதற்கு ஆ
1506 ஆம் ஆண்டில் இந்த தேவாலயத்தை
பெசிலிகா எனும் பேராலயம் கட்டப்பட்டது
நூற்றாண்டுகளாக நீடித்த இப்பேராலயத்தி
களில் மைக்கல் எஞ்சலோ, மெடனோ மற்று
உலகின் புகழ்பெற்ற கலைஞர்களும் பங்க
1657 ஆம் ஆண்டளவில் இதன் நிர்மாணப் ப

## வெனிஸ் நகரமும் அதன் கால்வாய்க் கட்டமைப்பும்

முற்காலத்தில் இத்தாலி நாட்டின் புகழ்பெற்ற வர்த்தக நகரான வெனிஸ் நகரில் நீர்வழிப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் கால்வாய் மார்க்கம் ஒன்றுள்ளது. இத்தாலியின் கலாசார மையமாக வெனிஸ் நகரத்தையே கருதுவர். சேற்றுநிலம் நிறைந்த 2 1/2 மைல் நீளமான களப்பில்தான் வெனிஸ் நகரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நகரில் ஏராளமான வீடுகளும் மாபெரும் மாளிகைகளும் அமைந்துள்ளன. அவை மிகவும் பலம்வாய்ந்தவை. இக்கட்டடங்கள் பலம் வாய்ந்ததாக அமைவதற்கு அக்கால கட்டட கலைஞர்கள் சில உபாயங்களைக் கையாண்டனர். அதாவது, தாங்கும் இயல்புகளைக்கொண்ட தூண்கள் போன்ற பொய்க்கால்கள் (Stilts) மீதே இப்பாரிய கட்டடங்களை அமைத்தனர். கட்டடங்களின் வாசல்வரை நீர்மட்டம் நிறைந்திருக்கும்.மக்கள் அங்குமிங்கும் பயணிப்பது இக்கால்வாய் மார்க்கமாகவே ஆகும்.

கி.பி.451 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்நகரம், ஆரம்பகாலத்தில் மக்களின் குடியிருப்பு பகுதியாக இருந்தது. அதனை அடுத்து, ஐரோப்பாவின் முக்கிய வர்த்தக மையமாக மாறியது. (Major trade centre) திகழ்ந்தது. அதனை அடுத்து

ஐரோப்பாவின் கடற்படை மையமாகத் திக
கடல் மார்க்கமாக கப்பலில் வந்து திடீர் தாக்
மேற்கொண்டு வெனிஸ் நகரை கிரமிக்
பாபேரியர்களை தடுக்கும் முகமாக தந்திரே
நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொரு
வெனிஸ் நகரம் நீரின் மத்தியில் அமைக்க
தாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைப்புகள் சில...

## ரிய பெசிலிகா



அமைந்துள்ள உலகின்
க்கானில்தான் உலகின்
கிய புனித பீற்றர் தேவால
ன்றும் அழைக்கப்படும்
தில் இதற்கு முன்னர்
அமைந்திருந்தது. அது 4 ஆம்
னித பேதுருவானவர்
டத்தில் கொன்ஸ்டன்டைன்
தற்கு ஆரம்பிக்கப்பட்டது.
யத்தை இணைத்ததாக
பட்டது. சுமார் ஒன்றரை
லயத்தின் கட்டடப் பணி
ா மற்றும் பர்ணினி போன்ற
பங்களிப்புச் செய்தனர்.
ணப் பணிகள் பூர்த்தியாகின.

## ப்பும்

கத் திகழ்ந்தது. அக்காலத்தில்
டீர் தாக்குதல்களை
கிரமிக்க முய த
தந்திரோபாயமான
பொருட்டே
மைக்கப்பட்ட



## பொம்பெய் நகரக் கட்டடக் கலை



கி.பி.79 இல் விசுவியஸ் எரிமலை வெடிப்போடு பல நகரங்கள் அழிந்தன. அத்தகைய அழிவுக்குட்பட்ட தொன்மையான ரோம நகரமொன்றை நாம் இன்றும் காணலாம். அதுதான் இத்தாலியின் தென்பகுதியில் அமைந்துள்ள பொம்பெய் (Pompei) நகரமாகும். அப்பகுதியில் காணக்கிடைக்கும் எச்சங்கள் மற்றும் தொல்பொருள் கண்டெடுப்புகளின்படி, அக்காலத்தில் அந்நகரத்திலிருந்த கட்டடங்கள் ஆச்சரியப்படத்தக்கவாறு திகழ்ந்துள்ளன. பொம்பெய் நகரக் கட்டடக்கலையில் காணக்கிடைத்த சில சிறப்பியல்புகள் வருமாறு;

**❖ டோரிக் (Doric)**

இந்தக் கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட கட்டடத் தூண்களின் முனைப்பகுதி செதுக்கல் வேலைப்பாடுகள் அற்றதாக வட்டவடிவமாகக் காணப்படுகின்றது.

**❖ இயோனிக் (Ionic)**

மிகப்பெரிய கடதாசி ரோல் போன்று காட்சியளிக்கும் வகையில் சுருள் தூண்களைக் கொண்டதாக கட்டடங்களை அழகுபடுத்தல்.



**❖ கொம்பொசிட் (Composite)**

இயோனிக் போக்குடன் மற்றுமொரு நவீன போக்கைக் கொண்டமைந்த கட்டடக்கலை இதுவாகும். 'கொரிந்தியன்' (Corinthian) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

**❖ டோமஸ் வீடு (Domus House)**

குடும்பமொன்று வாழ்வதற்கேற்ற வகையில் ஏராளமான டோமஸ் வகை வீடுகளைப் பொம்பெய் நகரில் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய கட்டடக் கலையைப் பின்பற்றி அமைக்கப்பட்ட வீடுகளை கி.பி.1 முதல் 4 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் காணக்கூடியதாக இருந்தது. இவ்வீடுகள் கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டு ஒன்றோடொன்று தொடர்புடையதாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ரோமானிய மக்கள் இதன்பின்னர் பல நூற்றாண்டுகளாக இந்த டோமஸ் வீடு (Domus house) கட்டடக் கலையையே தமது கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.



## முற்காலத்தில் காற்றுச் சக்தியால் பெற்றுக்கொண்ட பயன்கள்

கால்வாய்களின் மீதமைந்த பாலங்களுக்கும் டியுலிப் மலர்களுக்கும் புகழ்பெற்ற நகரமாக நெதர்லாந்து நாட்டின் தலைநகரான ஆம்ஸ்டர்டேம் (Amsterdam) திகழ்கின்றது. இந்நகரை அண்மித்ததாக ராட்சத அளவிலான காற்றாலை ஒன்று காணப்படுகின்றது. இதனால், இந்நகர் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. இது புராதன ஒல்லாந்தர்களின் அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் திகழ்கின்றது. 1307 ஆம் ஆண்டளவில்தான் ஆம்ஸ்டர்டேம் நகரில் காற்றாலை ஒன்று இருப்பதாக (Windmill at Amsterdam) தகவல்கள் வெளியானது. அக்காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக ஒல்லாந்தர்கள் காற்றாலைகளை பயன்படுத்தி வந்துள்ளனர். கோதுமை அரைப்பதற்கும் மரத்திலிருந்து பலகைகளை அறுக்கவும் எண்ணெய், புகையிலை மற்றும் கொக்கோ உற்பத்தி எனப் பல்வேறு தேவைகளுக்கும் காற்றாலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நெதர்லாந்தில் 'போல்டர்' (Polder) வகைக் காற்றாலைகள்தான் பெரும்பாலும் பயன்பாட்டில் உள்ளன.

-(அ)



# புரதக் குறைபாட்டைத் தீர்க்கும் கடற்பாசிகள்

**மனிதனின் இயல்பான வளர்ச்சிக்கு புரதச்சத்து மிகவும் அவசியம். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் புரதப் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகிறது. அதிலும், சமூகத்தின் கீழ்மட்ட நிலையில் உள்ளவர்களே இத்தாக்கத்திற்குப் பெரிதும் ஆளாகியுள்ளனர்.**



இந்தப் புரதப் பற்றாக்குறை, நாட்டின் பொருளாதார வளர்ச்சியையே பாதிக்கின்றது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். அதாவது, உணவில் புரதச்சத்துக் குறையும்போது, ஒருவரின் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றன. இதனால், பாதிக்கப்பட்டவரிடம் சோம்பேறித்தனம் அதிகமாகிறது; உழைப்புக் குறைகிறது. இத்தகைய நிலை ஒரு நாட்டின் பொருளாதார நிலையை வீழ்ச்சி நிலைக்கு இட்டுச்



செல்கின்றது. எனவே, நாட்டின் பொருளாதார நிலையை முன்னேற்றுவதற்கு, மக்களிடையே நிலவும் புரதப் பற்றாக்குறையை நிவர்த்திக்க வேண்டும். அதற்கமைய புரதச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வதற்கு மக்களுக்கு ஆர்வமளிக்க வேண்டும். அதன்படி, கடற்பாசியான சிறந்த தீர்வாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. புரதச்சத்து நிறைந்த உணவுகளில் விரைவாக உற்பத்தி செய்யக்கூடியதுதான் இந்த கடற்பாசி. உணவாகக் கொள்ளக்கூடிய பாசி இனங்கள் கடலில் அதிகமாக வளர்கின்றன. இவை அதிவேகமாக வளரக்கூடியவையும்கூட. எனவே, இவற்றை கடலிலும் தொட்டிகளிலும் பயிரிட்டு அவற்றை உணவாகக் கொள்வதன்மூலம் புரதப் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு காணலாம் என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்த முயற்சியில் முதன்முதலில் ஈடுபட்ட நாடு ஜப்பான்தான். அந்நாடு, தற்போது 60 ஆயிரம் ஹெக்டேயருக்கும் அதிகமான கடற்பரப்பில் கடற்பாசியைப் பயிர்செய்து வருகிறது. ஜப்பானியர்கள் பயிர் செய்யும் 'போர்ஃபைரா' (Porphyra) என்னும் கடற்பாசி, புரதச்சத்து நிறைந்தது. இது அசைவ உணவுக்கு ஒப்பானது. இது தவிர உணவாகக் கொள்ளக்கூடிய பல்வேறு வகை கடற்பாசிகள் ஜப்பான், சீனா, கொரியா உட்பட பல்வேறு நாடுகளில் பயிரிடப்பட்டு வருகின்றன.

# 'ketchup' எவ்வாறு தோன்றியது?

1960 ஆம் ஆண்டுகளில் சீனர்கள் மீன் ஊறுகாய் மற்றும் மசாலாப் பொருட்களைச் சேர்த்து குழம்பினை ஒத்த சுவையான உணவுப் பண்டமொன்றைத் தயாரித்து, அதற்கு 'kechap' என்று பெயரிட்டனர்.

18 ஆம் நூற்றாண்டில் இந்த உணவு மலாய் பிரதேசங்களில் (தற்போதைய மலேசியா, சிங்கப்பூர்) அறிமுகமானது. அங்கிருந்தே இதனை பிரித்தானியர்கள் அறிந்து கொண்டனர். 1740 ஆம் ஆண்டளவில் இந்த உணவு ஆங்கிலேயர்களின் அன்றாட உணவாக மாறியது. அவர்கள் இதனை 'ketchup' கெ(ட்ச்)சப் என்று அழைத்தனர்.




இதன் பின்னர், பல்வேறு உணவுப் பொருட்கள் கலக்கப்பட்டு (மரக்கறிகள், பழங்கள், மசாலாப் பொருட்களுடன் உப்பும் கலந்து) கெ(ட்ச்)சப் தயாரிக்கப்பட்டது.

எனினும், தற்காலத்தில் பெரும்பாலும் பாவனையிலுள்ள தக்காளி, உப்பு மற்றும் மசாலாப் பொருட்கள் கலந்த கெ(ட்ச்)சப், 1801 ஆம் ஆண்டளவில் அமெரிக்கர் ஒருவராலேயே தயாரிக்கப்பட்டது. இவ்வாறுதான் நாம் சுவைத்துச் சாப்பிடும் கெ(ட்ச்)சப் உருவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினங்கள் (Gems)



கெம்பு (சிவப்புக்கல்) Ruby →
கோமேதகம் Sardonyx →
நீலக்கல் Sapphire →
பச்சை மரகதம் Emerald →
பவளம் Coral →
புஷ்பராகம் Topaz →
மாணிக்கம் Carbuncle →
முத்து Pearl →
வைடூரியம் Lapis lazuli →
வைரம் Diamond →

எஸ்.மிலோசா, தரம்-10,
ப/இதல்கஸ்ஹின்ன த.வித்.



# சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம்!

எமது வீட்டையும், அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களையும் சூழல் என்கிறோம். எமது சூழலை அகச்சூழல், புறச்சூழல் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சூழலானது நிலம், நீர், வளி போன்ற முக்கிய பிரிவுகளைக்கொண்டது. அவை மனித செயற்பாட்டால் மாசுறுகின்றன. நிலத்தில் செயற்கைக் கழிவுகளான, பிளாஸ்டிக், பொலிதீன் கழிவுகளை இடுவதாலும், காடழிப்பினாலும் நிலம் மாசடைகின்றது. தொழிற்சாலைக்கழிவுகள், ரசாயனங்கள் நீருடன் கலப்பதனால் நீரின் தூய்மை கெட்டுவிடுகின்றது. வளி மாசடையக் காரணம் வாகன மற்றும் தொழிற்சாலைப் புகைகள் ஆகும்.

இதனைத் தடுக்க காடழிப்பைத் தவிர்த்தல், கைத்தொழில் உற்பத்திப் பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல், குப்பை கூளங்களை சரியான முகாமைத்துவத்துடன் அகற்றுதல் என்பன சூழலை தூய்மையாகப் பேண உதவும். எமது சூழலை நாம் எப்போதும் மிக அழகாகவும், தூய்மையாகவும் வைத்திருக்க வேண்டும். இதன்மூலம் நோய்களிலிருந்து உரிய பாதுகாப்பினைப் பெற முடியும். பூமி இயற்கைச் சமநிலையுடன் காணப்படும். இதனால், அனர்த்தங்களும் குறையும். இவ்வாறு எமது சூழலை தூய்மையாகப் பேணுவதன்மூலம் நாம் மட்டுமல்லாது; ஏனைய ஜீவராசிகளும் நலமாக வாழ முடியும்.

எம்.எஸ்.சாஹிரா,
அல்-அஸ்ஹர் ம.க.
தெஹியங்க, முறுத்தலாவ.


# உலோகங்கள் (Metals)



| | |
|---|---|
| Alloy | - உலோகக் கலவை |
| Aluminium | - அலுமினியம் |
| Brass | - பித்தளை |
| Bronze | - வெண்கலம் |
| Copper | - செம்பு |
| Iron | - இரும்பு |
| Gold | - தங்கம் |
| Lead | - ஈயம் |
| Magnet | - காந்தம் |
| Mercury | - பாதரசம் |
| Silver | - வெள்ளி |
| Steel | - எஃகு |
| Tin | - தகரம் |
| Zinc | - துத்தநாகம் |

எஸ்.ஜெயலெட்சுமி,
ப/இதல்கஸ்ஹின்ன த.வித்.

# விலை உயர்ந்த கல்



தன்நாட்டிற்கு வருகை தந்த துறவி ஒருவரை அந்நாட்டு அரசன் சிறப்பாக வரவேற்றான். அந்த துறவியிடம் தனது செல்வாக்கைக் காட்டப் பெரும்பாடுபட்டான். தற்பெருமை கொண்ட அவன் பளபளக்கும் வைரக்கல் ஒன்றை அத்துறவியிடம் காட்டி, ''துறவியாரே! இதன் பெறுமதி பல லட்சம் பொற்காசுகள். இதுபோன்ற வைரக்கல் வேறு எந்த அரசனிடமும் இல்லை. ஒரு நாட்டின் மதிப்பீடாக இதன் பெறுமதியைக் கொள்ளலாம்'' என்று கூறினான்.

அதற்கு அத்துறவி, ''இதன் மதிப்பு பல லட்சம் பொற்காசுகள் என்கிறீர்கள். மேலும் ஒரு நாட்டின் மதிப்பிற்கு ஈடான பெறுமதி என்றும் கூறுகிறீர்கள்! அப்படியானால், இவ்வளவு மதிப்புடைய இந்தக்கல் ஆண்டிற்கு எவ்வளவு வருமானத்தைத் தருகிறது'' எனக் கேட்டார் துறவி.

'அறியாமையால் துறவி இப்படிக் கேள்வி கேட்கிறாரே' என்று அரசன் நினைத்தான்.

''துறவியாரே! இதனால் எந்த வருவாயும் இல்லை. இதைப் பாதுகாப்பதற்காக அதிகமான வீரர்களைக் காவலுக்கு நியமித்திருக்கிறேன். ஆண்டுக்கு ஆயிரம் பொற்காசுகளுக்கு மேல் இதற்கே செலவாகிறது'' என்று அரசன் கூறினான்.

அதற்கு துறவி ''அரசே! இதைவிட விலை உயர்ந்த கல் ஒன்றை தங்களது நாட்டில் நான் பார்த்தேன். என்னுடன் வந்தால் அதைக் காட்டுகிறேன்'' என்றார்.

அரசனும் ஆச்சரியமிகுதியால் துறவியுடன் புறப்பட்டான். நகரத்திற்கு வெளியே இருந்த சிறு குடிசைக்குள் துறவி நுழைந்தார். அங்கே கிழவி ஒருத்தி கல் இயந்திரத்தில் மா அரைத்துக்கொண்டிருந்தாள். அந்த இயந்திரத்தைக் காட்டிய துறவி ''அரசே, உனது வைரக்கல்லைக் காப்பாற்ற நீ செலவு செய்கிறாய். ஆனால், இந்த இயந்திரக்கல்லோ இடைவிடாது உழைத்து இந்தக் குடும்பத்தையே காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. எனவே, இதுதான் விலை உயர்ந்த கல்'' என்றார்.

இதைக்கேட்ட அரசன், தனது அறியாமையை நினைத்து தலைகுனிந்தான். அவனது தற்பெருமையும் நீங்கியது.

ஆர்.மீனாதுஷாந்தினி
ப/நிவ்பர்க் த.ம.வித்., எல்ல.




# பொது அறிவு

* அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி யார்?
  ஆபிரகாம் லிங்கன்
* உலகில் செப்பு அதிகமாகக் கிடைக்கும் நாடு?
  சிலி
* உலகில் அதிகமான நூல்களை எழுதியவர் யார்?
  அலெக்சாண்டர் மொஸ்
* உலகில் கூடிய தீவுகள் உள்ள நாடு எது?
  பிலிப்பைன்ஸ்
* ஐ.நா.சபையின் கொடியில் இடம்பெற்றிருக்கும் இலை?
  ஒலிவ் இலை

ரஸ்கா ரஸீம்,
நீரெல்லை மு.வித்., அக்குறனை.

# தம்பி, தங்கைகளே!

**'விஜய்' வாசகர்களான தம்பி தங்கைகளே..**


மாணவர் ஆக்கங்கள் 'பகுதிக்கு உங்களிடமிருந்து கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்பன வரவேற்கப்படுகின்றன. பலர் இப்பகுதிக்கு வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த விடயங்களையே பார்த்து எழுதி அனுப்புகின்றனர். இவ்வாறு செய்வதால் நீங்கள் சுயமாக சிந்தித்து எழுதும் ஆற்றலை வளர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். நீங்களே சுயமாக சிந்தித்து ஆக்கங்களை எழுதி அனுப்ப முயற்சி செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் தரமானவையாக இருந்தால் தவறுகள் இருப்பினும் திருத்திப் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



மாணவர் ஆக்கங்கள்
'விஜய்'
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி.,
கொழும்பு -02.





# ஆசான்

கண்ணின் கருமணி போல
கருநீலக்கடலின் முத்துப்போல
என் ஆசான் நீங்கள்
கலங்கரை விளக்கு!

சேவையே இலக்கணமாய்
கல்வி போதிக்கும்
உங்கள் கடமை உணர்வும்
மாணாக்கர் வரை உரமூட்டும்
-தங்கள்
தியாக சிந்தையும்
பொன் எழுத்துக்களால்
பொறிக்கப்பட வேண்டியவை!
நல்லாட்சி புரிந்து நாள்தோறும்
செழிக்க
ஆசானை நாவாரப்
போற்றுவோம்!
கற்கைக் கூடமாய் யாவரும்
கற்றிட, பொற்கை நீட்டுகின்ற
ஆசான் நீர் நீடூழி வாழ்கவே!

வீ.டி.றிழ்வான்,
ஓட்டமாவடி தே.பாட.,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



அறிவுக்களஞ்சியம் என்றால் அது 'விஜய்' தான். 'கணினி நம்மு டன் உரையாடும்' எனும் பகுதி என்னை வியப்பிற்குள்ளாக்கியது. 'சுருங்கும் நவீன உலகம்', 'நைல் நதியின் ஆரம்பத் தைத் தேடி', 'தெரிந்து கொள்வோம்', 'நீர்மூழ்கிக் கப்பல்' என்பனவற்றை விரும்பி வாசித்தேன். 'இலங்கையின் தரைத்தோற்றம்', 'ஒல்லாந்தர்', 'இராமாயணம்' உட்பட, ஏராள மான பகுதிகள் எனது பாடசாலைக் கல்விக்கு உதவுகின்றன.

**-எம்.லியாகத்கான்,**
**வைத்தியசாலை வீதி, நிந்தவூர்.**

விஜய்யே! உன்னில் வெளிவரும் அனைத்தும் பிரமாதம். உன் இருபத் தினான்கு பக்கங்களும் 24 விதமா னவை. உன் பயணம் வெற்றி அடைய எனது வாழ்த்துக்கள்.

**-மொஹமட் ரிஷாட்,**
**அஸ்-ஸலாம் மு.ம.வித்.,**
**இறக்குவானை.**



கல்வி, விஞ்ஞானம், சுகாதாரம், பொதுஅறிவு, விளையாட்டு, புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் உட்பட, பல்வேறு விடயங்களைச் சுமந்து வரும் விஜய்யே! உந்தன் அளப்பரிய சேவை எம்மைப் போன்ற மாணவ, மாணவிகளுக்கு அறிவுக்கு விருந் தாகவே அமைந்துள்ளது. மேலும், 'பிறந்தநாள் பரிசு', 'பலம்', 'பெரி யோரின் ஆசி' போன்ற சிறுகதை களை விரும்பி வாசித்தேன். வாழ்க விஜய்!

**-ஹஸ்மத் ஹுசைன்,**
**முஸ்லிம் மகளிர் மத் .கல்.,**
**தர்கா நகர்.**

மாணவர்களாகிய எமக்கு கல்வியை வளர்ப்பதற்கு சிறந்த ஊடகமாகத் திகழும் உன்னில் பிரசுரமாகும் ஆக்கங்கள் எனது பரீட்சைக்கு மிகவும் உதவி செய் கின்றன. 'பலே! பலே! வைத்தியர்' சித்திரத்தொடர் முற்றுப் பெற்றமை யானது, கவலை அளிக்கிறது. 'ஒல்லாந்தர்', 'இராமாயணம்' போன்றவை மிகவும் சுவாரஸ்யமாக இருக் கின்றன.

**- எஃப். சிரோசியா,**
**ஹொரவப்பொத்தானை மு.ம.வித்.,**
**ஹொரவப்பொத்தானை.**

'இலங்கையின் தரைத்தோற்ற வேறுபாடுகள்', 'நாணயத்தை சுழற்றும் வழக்கத்தின் பின்னணி, என்பன எனக்கு மிகவும் பிடித் தவை. 'ஒல்லாந்தர்', 'சுருங்கும் நவீன உலகம்', 'ஊன் உண்ணித் தாவரங்கள் போன்றவை எனது கல்வித் தேவைகளுக்கு உதவுவ தாக அமைந்திருந்தன. மாணவர் களின் கல்விச் செயற்பாட்டுடன் தொடர்புடையதாக கல்வி முகா மைத்துவம் பகுதி அமைந் துள்ளது. அதில் 'குழுமுறைக் கற்றல்' என்ற பகுதி சிறப்பானது.

**-எம்.கோகுலன்,**
**புனித மா.வித்., தெனியாய.**

'நைல் நதியின் ஆரம்பம்', 'சுருங்கும் நவீன உலகம்', அச்சுக் கலை எவ்வாறு உருவானது?' என்பன சிறப்பானவை. 'செவ்வா யில் விவசாயம்' எனும் ஆக்கம் ஆச்சரியமூட்டியது. 'எதிர்காலத்தில் கணினி நம்முடன் உரையாடும்' எனும் ஆக்கம் சுவாரஸ்யமானது. 'பலே! பலே! வைத்தியர்' சுப்பர். எனினும், அத்தொடர் விரைவில் நிறைவுபெற்றமை கவலையளிக் கின்றது.

**-ஜெ.கருஷ்ணா,**
**கார்மேல் பற்றிமா தே.பாட.,**
**பாண்டிருப்பு.**

*'சுருங்கும் நவீன உலகம்', 'செவ்வாயில் விவசாயம்' போன்ற ஆக்கங்களை வாசித்து நானும் என் நண்பிக ளும் அதிக பயன் பெற்றோம்.*



*'இலங்கையின் தரைதோற்றம்' பற்றிய ஆக்கம் புவியியல் பாடத்திற்கு உதவுகின்றது.*

**- எச்.எஃப்.சஹிதா,**
**கனுல்வெல முஸ்லிம் க.வித்.,**
**கனுல்வெல.**


இந்த இதழில் (05.10.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 12.10.2011.


**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

## ஆறு வித்தியாசங்களில் x அடையாளமிடுக (1)






## 2



பின்வரும் குறுக்கெழுத்துப் போட்டியை அதன்கீழ் வழங்கப்பட்டுள்ள படங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை வைத்துப் பூர்த்திசெய்க








தயாரிப்பு - நுஸ்பா கெளஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.10.12 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 333**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## பிழை திருத்தி எழுதுங்கள் (4)

1. புரானம் - ........................
2. கிலித்தட்டு - ........................
3. மண்புளு - ........................
4. கலன்சியம் - ........................
5. சந்தர்பம் - ........................

## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக (3)





## எதிர்ப்பாற் சொல் தருக (5)


1. அரக்கன் - ........................
2. ஆடவர் - ........................
3. புத்திரன் - ........................
4. சீமான் - ........................

## அறிவுக்கு விருந்து - 330 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 03**



**போட்டி: 02**




**போட்டி: 04**

வலம், வனம், வகு, வகை, குலம், குகை, இலங்கை, இலகு, இனம், இவன், இங்கு, கை.

**போட்டி: 05**

| | | |
|---|---|---|
| (A) | 1. செவ்வகம் | - Rectangle |
| | 2. கத்தி | - Knife |
| | 3. சமுத்திரம் | - Ocean |
| | 4. அரண்மனை | - Palace |
| (B) | 1. Liquid | - திரவம் |
| | 2. Curd | - தயிர் |
| | 3. Tailor | - தையற்காரர் |
| | 4. Island | - தீவு |

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 330 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பா.தீபிகா, மத்திய வீதி, பெரிய நீலாவணை.

**போட்டி: 02**
மு.கேஷி, சுதுஹும்பொல வீதி, கண்டி.

**போட்டி: 03**
ஏ.நிஜாத், கிராமோதய வீதி, சாய்ந்தமருது-12

**போட்டி: 04**
எம்.சப்வான், வித்தியாலய ஒழுங்கை, பதுளை.

**போட்டி: 05**
எம். அத்னிப், ஹெம்மாதகம வீதி, மாவனல்லை

**பாராட்டுப் பெறுவோர்:**

- ★ எஃப்.நிப்லா, தெஹியங்க.
- ★ ராயப்பு தனுசியன், கொழும்பு-13.
- ★ ஸைனப் மல்ஹார்நீன், களுத்துறை.
- ★ ஆர்.கௌசல்யா, மாறஸ்ஸன.
- ★ டபிள்யு.ரிழ்வான், கல்முனைக்குடி.
- ★ பி.பிரதீஸ், இதல்கஸ்ஹின்ன.
- ★ அஸ்லா ஹிஸாம், புத்தளம்.
- ★ நுஸ்ரியா பேகம், யாழ்ப்பாணம்.
- ★ எம்.ஸ்டேன்லி, வட்டவளை.
- ★ ஸாரா மரியம், மாத்தளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை- உதயபுரத்தைச் சேர்ந்த நாகரெத்தினம்-நாகராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் நா.கீர்த்தன், 20.09.2011 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



பசறையைச் சேர்ந்த ஆனந்தராஜ்-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஏ.ஷைலேஸ், 22.09.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் உட்பட, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் துணையோடு சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ஆர்.சிவமூர்த்தி)






வத்தளை-பள்ளியாவத்தையை வசிப்பிடமாகக்கொண்ட ஜே.தனுஷியா, 25.09.2011 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



மல்வானை- யடிஹேனவைச் சேர்ந்த றிஸ்வான்- நிஹாரா தம்பதியரின் செல்வப் புதல்வி நஹ்லா, 26.09.2011 அன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எஃப். சுமையா)



மல்வானை- காந்திவலயைச் சேர்ந்த புஹாரி- உசைனா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் அஃப்லல், 30.09.2011 அன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் உட்பட, உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



தும்புளுவாவையைச் சேர்ந்த அன்வர்-நிதாயா தம்பதியரின் செல்வப் புதல்வி அஸ்மா, 07.10.2011 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பாலிஹா)






ஏ.கலைக்காந்தன்,
இந்துக் கல்லூரி, கொழும்பு-15.



என்.உஸ்மான்,
ஸாஹிரா தே.பா., மாத்தளை.



ஐ.நஸ்மியா,
ஹமீதியா முஸ்லிம் ம.வித்., கும்பலங்க.



ஆ. அசீம்,
மின்ஹாஜ் மு.வித்., ஹெரம்பாவ.



தி.ராகுல்,
தலவாக்கலை த.ம.வித்.,
தலவாக்கலை.



எம்.ரிஸ்வி,
அல்-அமீன் மத்.கல்., எலபடகம.



எம்.ஹுசைன்,
அந்-நூர் முஸ்லிம் மத்.கல்.,
பாணகமுவ.



எஃப்.நுரீஷா,
ஹமீதியா மு.ம.வித்.,
கும்பலங்க.



ஏ.வின்சியா,
அப்புத்தளை த.மத்.கல்., அப்புத்தளை.



பி.மதுஷான்,
புனித மரியாள் த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை



வி.கிஷாந்தனி,
மதீனா முஸ்லிம் ம.வித்.,
மாவனல்லை.



எம்.மருத்,
அல்-மக்கியா மு.ம.வித்.,
இரத்தினபுரி.

# கலைக் கைத்தொழில்கள்

**பாய் பின்னுதல்**

பாய் பின்னும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் அதிகமானோர் 'கின்னர' என்ற



குலத்தைச் சேர்ந்தவர்களாவர். பாய் பின்னுவதற்கு தாழை, பன்புல் என்பன பயன்படுகின்றன. கரையோரப் பகுதிகளில் 'துங்கிரிய' என்ற ஒருவகைப் பன்புல்லினாலும்



பாய் இழைக்கப்படுகின்றது. பாய்களில் தும்பறைப் பகுதிகளில் இழைக்கப்படும் பாய் புகழ்பெற்றது. சிவப்பு, பச்சை, கறுப்பு, மஞ்சள் போன்ற நிறங்கள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

பாய் பின்னுவதற்கான நிறங்களைப் பெறும்போது கொரக்கா, பதகி, என்பனவற்றால் சிவப்பு நிறத்தையும் மஞ்சள்கொடி (வெனிவெல்கெட) மூலம் மஞ்சள் நிறமும் கடுக்காய், தாண்றிக்காய் (அரலு) போன்வற்றை




அவித்து கறுப்பு நிறமும் பெறப்படுகின்றது. 'தனியிழை, ஈரிழை, கயிறு, சவுக்கு, சாமரம், தூரிகை, துடைப்பம் போன்ற பாரம்பரிய அலங்காரங்கள் பாய்பின்னலில் பயன்படுத்தப்படுகின்றன. பாய்களில் தாரகை (நட்சத்திரம்), முயல், யானை, பாம்பு, சதுரவடிவம் போன்ற அலங்காரங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**மெழுகு வேலை**

இக்கைத்தொழில் கலையுடன்



தொடர்புபட்ட தொழிலாகும். 'லாகிரி' அல்லது 'கைவிரல் வேலை' என இந்த அலங்கார வேலை அழைக்கப்படுகின்றது. மரத்தளபாடங்கள் அலங்காரம் செய்வது, அதனை அலங்காரமாக வடிவமைப்பது என்பன இதில் பிரதான அம்சங்களாகும். இதற்குத் தேவையான மரப்பால் தலாகிரி, கப்பெடியா போன்ற மரங்களிலிருந்து பெறப்படுகின்றது. மஞ்சள், பச்சை போன்ற நிறங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும். மெழுகு வேலையில் பாரம்பரிய அலங்காரங்களான அரும்பு, கல்பிந்து, பெதுறு, ஹவடி போன்ற அலங்காரங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

இந்த அலங்கார வேலைப்பாடுகளை கைத்தடி, இசைக்கருவிகள், கதிரை, கட்டில், அலுமாரி, பெட்டகம், வெற்றிலைத்தட்டு போன்ற பல்வேறு பொருட்களில் காணலாம். இலங்கையில் பாததும்பர, மாத்தளை-தெற்கு, பலாங்கொடை,



ஹிக்கடுவ, அங்குல்மடுவ, தங்காலை போன்ற இடங்களில் இத்தொழில் பாரம்பரியமாக நடைபெற்று வருகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னைப் போல் பிறரையும் நேசி!

**தீ**பாவளி நெருங்கிக்கொண்டிருந்தது. சிறுவர்கள் பட்டாசு வெடித்து மகிழ்ந்தனர். வெடித்த ஒரு பட்டாசில் இருந்து தீப்பொறி ஒன்று பார்வதிப் பாட்டி வீட்டுக் குடிசையில் போய் விழுந்தது. லேசாகப் புகைந்துகொண்டிருந்த அந்த பொறி, காற்று வேகமாக வீசியதால் 'குப்'பென்று பற்றிக்கொண்டது. இதைக்கண்ட சிறுவர்கள் பலர், ''குடிசை எரிகின்றது, குடிசை எரிகின்றது!'' என்று சத்தமாக கத்திக் கொண்டிருந்தனர்.

பத்தாம் வகுப்பில் படிக்கும் பாலு மட்டும் தன் வீட்டிற்கு ஓடிச் சென்றான். அங்கு நாலைந்து குடிநீர் உள்ள குடங்கள் வரிசையாக இருந்தன. பாலு அந்த குடங்களில் உள்ள நீரை எடுத்து வந்து ஒரு வாளியில் நீரை ஊற்றி நெருப்பின் மேல் வீசி வீசி ஊற்றிக்கொண்டே இருந்தான். அவனது இடைவிடாத முயற்சியின் பலனாக தீ அணைந்தது. சிறிது சேதாரத்துடன் குடிசை தப்பியது. இதைக் கவனித்துக்கொண்டிருந்த அவனது ஆசிரியர், பாலுவைத் தன் வீட்டிற்கு அழைத்துப் பாராட்டினார்.

''பாலு எல்லோரும், 'குடிசை எரிகின்றது.... குடிசை எரிகின்றது' எனக் கத்திக் கொண்டிருந்தனர். நீ மட்டும் அவ்வாறு செய்யாமல், எந்தவிதமான பதற்றமும் இல்லாமல் தீயை அணைப்பதில் மட்டுமே கவனமாக இருந்தாய்! அது எப்படி உன்னால் முடிந்தது?'' என்று கேட்டார்.

''சேர் நானும் அவர்களைப்போன்று கத்திக் கொண்டிருந்தால், செய்வதறியாது பயம் வரத்தான் செய்யும். மற்றவர்கள் கத்தும்போது, நானும் அவர்களுடன் சேர்ந்து கத்தினால், தீயை யார் அணைப்பது? என்று நினைத்தேன். அதனால்தான் நான் முடிந்த அளவிற்கு வேகமாக தீயை அணைக்க முயன்றேன்'' என்று அமைதியாகப் பதில் சொன்னான் பாலு.

''குடிநீரை எல்லாம் எடுத்து வந்து கொட்டி அணைத்தாயே. மற்றவர்கள் யாரும் நீர் எடுத்துவந்து உனக்கு உதவ முன்வரவில்லையே. உன் வீட்டில் கஷ்டப்பட்டுப் பிடித்து வைத்திருக்கும் நீரை நீ ஏன் எடுத்தாய் என்று உன் அம்மா திட்ட மாட்டார்களா?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''சேர், நான் அப்படித் தீயை அணைக்காமல் இருந்தால்தான் அவர்கள் திட்டுவார்கள். நீங்கள்தானே சேர் 'தன்னைப் போல் பிறரையும் நேசி' என்று எனக்கு சொல்லிக் கொடுத்தீர்கள்! மற்றவர்கள் தங்களுடைய நீரை மட்டும்தான் பார்த்தார்கள். நான் எரிந்து கொண்டிருந்த அந்த பாட்டியினது குடிசையையும் அவர் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த உடைமைகளையும் பார்த்தேன். ஓடிப்போய் தீயை அணைக்காமல் இருந்திருந்தால், அக்கம்பக்கத்து வீடுகளுக்கும் தீ பரவி, அனைத்தும் சேதமாகியிருக்கும் அல்லவா?'' என்று பாலு புன்னகையுடன் கூறினான்.

பாலுவின் பொதுநலத்தையும், உயர்ந்த குணத்தையும் கண்டு பூரித்தார் ஆசிரியர். ''உன்னை என் மாணவன் என்று சொல்ல எனக்குப் பெருமையாக இருக்கின்றது'' என்று உச்சிமுகர்ந்து நெகிழ்ந்தார், ஆசிரியர்.

# தன்வினை

**ஜெ**யவர்மன் எனும் அரசர் விஜயபுரி என்ற நாட்டை நல்லாட்சி புரிந்து வந்தார். அவருக்கு ஒரே மகன். பல ஆண்டுகளின் பின்னரே அவன் பிறந்ததால் சிறிது கவலை அரசருக்கு இருந்தது. தனக்குப் பின்னால் நாட்டை அரசாள அவனுக்கு வயது குறைவாக உள்ளதே எனக் கவலை கொண்டார் அரசர். அந்த நாட்டு சேனாதிபதி மணிவண்ணன் கெட்ட எண்ணம் கொண்டவன். எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றி, தனது மகனை இளவரசனாக்க வேண்டும் என்று நினைத்தான். தற்போதைய இளவரசனின் வயது அவனது எண்ணத்துக்கு சாதகமாக இருந்தது. ஆனால், அவ்வளவு சீக்கிரமாகத் தன் எண்ணத்தை செயல்படுத்த முடியாது என்றும் அறிந்திருந்தான் சேனாதிபதி மணிவண்ணன்.

ஏனெனில், அரசர் ஜெயவர்மன் மக்களிடையே 'சிறந்த மன்னர்' என்று பெயர் எடுத்தவர். மக்களது நலனையே தன் முக்கிய நோக்கமாகக் கொண்டவர். மக்களுக்கு வேண்டிய கடமைகளை செய்துவிட்டுத்தான் ஏனைய தனது சொந்த வேலைகளையும் பார்ப்பார். மக்களிடம் எவ்வளவு அன்பு காட்டி வந்தாரோ, அவ்வளவு அன்பை தன் குடும்பத்தினர் மீதும் வைத்திருந்தார்.

ஒருநாள் மகாராணிக்கு திடீரென நெஞ்சு வலி வந்துவிட்டது. அதிர்ச்சியடைந்த அரசர், உடனே சேனாதிபதியிடம் அரண்மனை வைத்தியரை அழைத்து வருமாறு கட்டளையிட்டார். இந்த சந்தர்ப்பத்தைத்தான் எதிர் பார்த்திருந்தான், சேனாதிபதி. அவன், தன் சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, வைத்தியரை அழைத்து, ''மகாராணிக்கு கொஞ்சம் கொஞ்சமாக மருந்துடன் நஞ்சையும் கலந்து கொடுத்துவிடு. இயற்கையிலேயே மரணம் சம்பவித்தது போல் மகாராணியின் கதையை முடித்துவிட வேண்டும். இதற்காக உனக்கு நிறையப் பொன்னும், பொருளும் தருகிறேன்'' என்றான். ''இத்திட்டத்தை யாருக்காவது வெளியில் தெரிவித்தாலோ, அல்லது இதற்கு நீ மறுப்பு தெரிவித்தாலோ உன்னைக் கொன்று விடுவேன்'' என்று வைத்தியரை மிரட்டினான் சேனாதிபதி. அதனால், வேறுவழியின்றி, வைத்தியரும் அவனது மிரட்டலுக்கு அடிபணிந்தார்.

அரண்மனைக்கு விஷம் கலந்த மருந்துடன் வைத்தியர் சென்றார். மகாராணிக்கு அருகே வந்ததும், அங்கு கவலையுடன் நின்றுகொண்டிருந்த அரசரையும், மந்திரிகளையும் பார்த்தார். கூடவே சேனாதிபதியும் முகத்தில் சோகத்தை வரவழைத்துக் கொண்டு நயவஞ்சக எண்ணத்துடன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தார். வைத்தியருக்கு மனசாட்சி உறுத்தியது. மரணபயம் மனதைக் குழப்பியது. அதனால், சிறிது நேரத்தில், அவருக்கே நெஞ்சுவலி வந்துவிட்டது. வலியால் நெஞ்சைப்பிடித்தபடி துடித்தார். இதைக்கண்ட அரசர், ''கடவுளே! வைத்தியம் செய்ய வந்தவருக்கே, வருத்தமா? அவரை உடனே காப்பாற்ற வேண்டுமே! பலருக்கும் வைத்தியம் செய்யும் அவர் முக்கியமானவர். முதலில் அவர் கொண்டு வந்த மருந்தை அவருக்கே கொடுத்து அவரைக் காப்பாற்றுவோம்'' என்ற நல்லெண்ணத்துடன், அந்த மருந்தை, அவர் வாயருகே கொண்டு சென்றான் மன்னன்.



'தன்வினைத் தன்னைச்சுடும்' என்பதுபோல அந்த மருந்தே தமக்கு வினையாக அமைய இருப்பதை அறிந்தார். மருந்தைக் கண்டு அதிர்ந்து, மனம் நொந்து வலியால் துடிப்பதைப்போன்று பாவனை செய்து, அரசர் கையில் இருந்த மருந்தை சூசகமாகத் தட்டிவிட்டார். மருந்தும் கீழே கொட்டிவிட்டது. ஆனால், மன்னன் மந்திரியை நோக்கி, ''உடனே வேறொரு வைத்தியரை அழைத்து வாருங்கள். அவருக்கு வைத்தியம் பார்க்க வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

அப்போது வைத்தியருக்கு சற்றுத் தெளிவு ஏற்பட்டது. அவர் மன்னரைப் பார்த்து, தழுதழுத்த குரலில், ''நன்றி மன்னா! என் செயலுக்கு இறைவன் நெஞ்சுவலியை ஏற்படுத்தித் தண்டனையைக் கொடுத்துவிட்டார்'' என்றார். கண்களில் நீர் அருவியாகப் பெருக.... அனைவரையும் நோக்கி, கைகூப்பி, சேனாதிபதியின் சதித்திட்டத்தைப்பற்றி எடுத்துக்கூறினார். தவறு செய்ததற்காக தனக்குத் தக்க தண்டனை அளிக்குமாறும் வேண்டினார்.

மன்னர், பெருந்தன்மையுடன், ''வைத்தியரே! தங்கள் தவறு செய்ய ஊன்றுகோலாக இருந்தவன் தான் குற்றவாளி'' என்று கூறி உடனே சேனாதிபதியை கைதுசெய்து சிறையில் அடைத்தார். 'நல்லதைச் செய்... நல்லதையே நினை.... நலமாக வாழ்வாய்' என்பதற்கு எடுத்துக்காட்டாக நல்லாட்சி புரிந்தார் அரசர் ஜெயவர்மன்.

# அன்பால் வெல்லலாம்

**வ**குப்பறையில் அமர்ந்திருந்த கபிலனுக்கு மனம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டது. உடல் முழுவதும் பயத்தால் குளிர்ந்து நடுங்க ஆரம்பித்தது. முதல் நாள் இரவு, தொலைக்காட்சியில் கிரிக்கெட் பார்த்துவிட்டு, அசந்து தூங்கிவிட்டான். ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடங்களை அவன் செய்யவில்லை. அதுவே, இப்படிப் போட்டு அவனை அச்சுறுத்தியது.

ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் நெருங்கி வந்து வீட்டுப்பாடப் புத்தகத்தை வாங்கிப் பார்த்துக்கொண்டிருந்தார். அனைவரும் வீட்டுப்பாடங்கள் செய்த கொப்பியை எடுத்து ஆசிரியரிடம் காட்டிக்கொண்டிருந்தனர். ஆசிரியர் வரிசையாக கையெழுத்துப் போட்டுக்கொண்டே வந்தார். அடுத்த மாணவன் கபிலன்தான். இதோ, இவனையும் நெருங்கிவிட்டார். அவன் வீட்டுப்பாடம் செய்யாததை ஆசிரியர் அவதானித்தார்.

கோபத்தோடு கபிலனைப் பார்த்த ஆசிரியர், ''பிறகு வந்து என்னைப் பார்'' என்று கூறினார். தமக்கு வந்த, கோபத்தை அடக்கிக்கொண்டு பாடத்தை நடத்தத் தொடங்கினார். 'கபிலனுக்கு பிரம்படி விழும்' என்று எதிர்பார்த்துக் காத்திருந்த வாசுவிற்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது.

மதிய உணவு இடைவேளை நேரம். ஆசிரியர் என்ன தண்டனை கொடுப்பாரோ! என்ற பயத்தோடு அவரது ஓய்வறைக்குச் சென்று ஆசிரியரைச் சந்தித்தான் கபிலன்.

''ஏன் வீட்டுப்பாடம் செய்யவில்லை?'' என்று கேட்டார், ஆசிரியர்.

''நேற்று இரவு டி.வி.யில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தேன். கிரிக்கெட் முடிந்த பின்னர் வீட்டுப்பாடம் செய்யலாம் என்று நினைத்தேன். ஆனால், அசந்து தூங்கிவிட்டேன் சேர்'' என்று மறைக்காமல் உண்மையைச் சொன்னான் கபிலன்.

''கபிலா.... உன்னை விளையாடவோ, டி.வி.பார்க்கவோ வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், முதலில் தினமும் கொடுக்கின்ற வீட்டுப்பாடத்தை ஒழுங்காகச் செய்து முடி. அதன் பின்னர் தினமும் நடத்துகின்ற பாடத்தை அன்றைக்கே படித்து முடித்துவிடு. பின்னர் உனக்கு விருப்பமான விளையாட்டை விளையாடு. பிடித்த நிகழ்ச்சியை டி.வி.யில் பார். எப்போதுமே நீ படிப்பிற்குப் பின்னர் தான் ஏனைய விடயங்களில் கவனத்தைச் செலுத்தவேண்டும். அப்போதுதான் நீ வளர்ந்து பெரியவனாகும்போது நல்ல வேலையில் சேர முடியும். அதனால், உனக்கு மட்டுமல்ல உனது பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உன் ஊருக்கும் உறவினர்களுக்கும் ஏன் அனைவருக்குமே பெருமை கிடைக்கும்.

வீட்டுப்பாடம் செய்யாத உன்னை மற்றவர்கள் முன்னால் பிரம்பால் அடித்தால், அது உன் உடலுக்கு மட்டுமல்ல, மனதிற்கும் வலிக்கும் என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் இப்படி உன்னைத் தனியாகக் கூப்பிட்டுக் கண்டிக்கிறேன். புரிந்துகொள்'' என்று பக்குவமாக சொன்னார் ஆசிரியர்.

ஆசிரியரின் அன்பு கலந்த வார்த்தைகள் அவனது மனதை மாற்றின. அதுமட்டுமன்றி; அவனது முன்னேற்றத்திற்கு ஆலோசனை சொன்னதையும் எண்ணி மகிழ்ந்தான் கபிலன். அவனை அவமானத்தில் இருந்து காப்பாற்றிய ஆசிரியரை நன்றிப்பெருக்குடன் பார்த்தான்.

''என்னை மன்னித்துவிடுங்கள் சேர். இனிமேல் வீட்டுப்பாடம் செய்யத் தவறமாட்டேன்'' என்று மனம் திருந்திய கபிலனை ஆசிரியர் தட்டிக்கொடுத்தார்.



என்ன ஆச்சரியம்! அடுத்து நடந்த பரீட்சையில் வகுப்பிலேயே முதல் மாணவனாக வந்தது கபிலன்தான்.

அன்பைவிடச் சிறந்தது இந்த உலகில் எதுவும் இல்லை. அன்பால் வெல்ல முடியாததும் எதுவும் இல்லை. எந்த ஒரு பிரச்சினையையும் அன்பு வழியில் சிந்தித்து தீர்வு கண்டால், அதுவே வெற்றிகரமான தீர்வாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் கமலாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

கமலா: **මාලා, මම ලබන සතියේ මැහුම් පන්තියකට යනවා. ඔයාත් එනවාද?**
மாலா, மம லபன சத்தியே மெஹும் பந்தியகட யனவா. ஒயாத் எனவாத?
கமலா: மாலா, நான் அடுத்த கிழமை தையல் வகுப்பொன்றுக்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?

மாலா: **මැහුම් පන්තියක් නම් හොඳයි. කවුද උගන්වන්නේ?**
மெஹும் பந்தியக் நம் ஹொந்தய். கவுத உகன்வன்னே?
மாலா: தையல் வகுப்பென்றால் நல்லது. யார் படிப்பிக்கிறார்?

கமலா: **වසන්ති කියල මිස් කෙනෙක්.**
வசந்தி கியலா மிஸ் கெனெக்.
கமலா: வசந்தி என்ற ஓர் ஆசிரியை.

மாலா: **කොහේද පන්තිය තියෙන්නේ?**
கொஹேத பந்திய தியென்னே?
மாலா: வகுப்பு எங்கே இருக்கிறது?

கமலா: **මීගමුවේ.**
மீகமுவே.
கமலா: நீர்கொழும்பில்.

மாலா: **කවදාද පන්තිය තියෙන්නේ?**
கவதாத பந்திய தியென்னே?
மாலா: வகுப்பு எப்போது நடைபெறும்?

கமலா: **බදාදා සවස තුනට. සෙනසුරාදා උදේ නවයට.**
பதாதா சவச துனட்ட. செனசுராதா உதே நவயட்ட.
கமலா: புதன்கிழமை பின்னேரம் மூன்று மணிக்கு.
சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு.

மாலா: **මහන්න ඉගෙන ගන්න එක නම් හොඳයි. මම අම්මාගෙන් අහල කියන්නම්.**
மஹன்ன இகென கன்ன எகனம் ஹொந்தய். மம அம்மாகென் அஹல கியன்னம்.
மாலா: தையல் கற்றுக்கொள்வது நல்லது. நான் அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்.

கமலா: **හොඳයි මාලා, මම ගිහින් එන්නම්.**
ஹொந்தய் மாலா, மம கிஹின் என்னம்.
கமலா: நல்லது மாலா, நான் போய் வருகிறேன்.

**பயிற்சி**

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நான் தையல் வகுப்புக்குப் போகிறேன்.
........................................................................
ii. புதன்கிழமை வகுப்பு நடைபெறும்.
........................................................................
iii. வகுப்பு நீர்கொழும்பில் இருக்கின்றது.
........................................................................






**கூட்டு வாக்கியம் மற்றும் கலப்பு வாக்கியம்**
**Compound Sentence - Complex Sentence**

* 'கூட்டு வாக்கியம்' என்றால் எத்தகையது என்பது பற்றி, முன்னைய பாடங்களில் கற்றோம் அல்லவா? இனி, 'கலப்பு வாக்கியம்' எவ்வாறானது என்பதை, இங்கே அவதானிப்போம்.

* ஆங்கில மொழி இலக்கணத்தில், 'கூட்டு வாக்கியம்' மற்றும் 'கலப்பு வாக்கியம்' என இரண்டு வகையான வாக்கியத் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை இரண்டையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

* கூட்டு வாக்கியங்களை உருவாக்குவதற்கான இணைக்கும் சொற்களாக, And, But, So, Or முதலானவை கையாளப்படுகின்றன. இவ்வாறான இணைக்கும் சொற்கள் ஆங்கிலத்தில் 'Conjunctions' எனக் கூறப்படுகின்றன.

* அவ்வாறே, 'கலப்பு' வாக்கியங்களை அமைப்பதற்கான இணைக்கும் சொற்களாக Who, Which, That என்பன பிரதானமாக கையாளப்படுகின்றன. இத்தகைய இணைக்கும் சொற்களை ஆங்கிலத்தில் 'Relative Pronoun' என்பர்.

(அ) நீ கடைக்குச் சென்று, பேனா ஒன்று வாங்கினாய்.
You went to the shop and bought a pen.

* மேற்படி வாக்கியம், 'and' எனும் இணைக்கும் சொல்லால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாக்கியம் 'கூட்டு வாக்கியம்' எனப்படும்.

(ஆ) இவர்தான் உன்னைச் சந்திக்க வந்த நபர் ஆவார்.
He is the person who came to meet you.

* இவ்வாக்கியம், 'who' என்னும் இணைக்கும் சொல்லால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாக்கியம் 'கலப்பு வாக்கியம்' ஆகும்.

* இவ்வாறே, ஏனைய உதாரணங்களையும் பார்ப்போம்.

(இ) நேற்று லலிதா சுகவீனமாக இருந்தாள், ஆகவே அவள் பாடசாலைக்குச் செல்லவில்லை.
Yesterday Lalitha was sick, so she didn't go to school.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

(ஈ) இதுதான் நான் நேற்றுப் பெற்றுக்கொண்ட கடிதம் ஆகும்.
This is the letter which I received yesterday.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(உ) மொஹான் வங்கிக்கு கடிதம் ஒன்று அனுப்பினான், ஆனால் அவன் பதில் எதனையும் பெறவில்லை.
Mohan sent a letter to the bank, but he didn't get any reply.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

(ஊ) இவைதான் நீ கொண்டுவந்த மாம்பழங்கள் ஆகும்.
These are the mangoes that you brought.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(எ) நான் இந்த வேலையை தனியாகச் செய்யவா, அல்லது நீ எனக்கு உதவுவாயா?
Shall I do this work alone, or will you help me?
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

(ஏ) இவள்தான் முதலாவது பரிசை வென்ற சிறுமி ஆவாள்.
This is the girl who won the first prize.
(கலப்பு வாக்கியம்-Complex Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோ நிதி பிரச்சினைக்கு நாணய நிதியம் தீர்வு முயற்சி

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிலவுகின்ற யூரோ நிதி நெருக்கடிக்கு கூட்டிணைந்த நடவடிக்கை மூலம் தீர்வு காணப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

ஐரோப்பிய பிராந்தியத்தில் மேற்படி நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதை தீர்க்காவிட்டால் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அமெரிக்கா, சீனா, பிரேஸில் உட்பட பல நாடுகள் சர்வதேச நாணய நிதியத்திற்கு அழுத்தங்களை பிரயோகித்திருந்தன. இதற்கமைய அண்மையில் வொஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்தக் கூட்டத்தின்போது இது விடயமாக கவனத்தில் கொள்ளப்பட்டபோதே, இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





உலக நாடுகள் பல எரிபொருள் விலை உயர்வின் காரணமாகவும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற சூழ்நிலையில் ஐரோப்பிய ஒன்றியமும் அதனை ஒத்த வகையிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றமை கவலை அளிப்பதாக உள்ளதாகவும் எனவே, இந்தப் பிரச்சினையை மேலும் விரிவடையச் செய்யாமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு யூரோ நிதி நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் எனவும் நாணய நிதியம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தெரிந்து கொள்வோம்



* தற்போதைய மியன்மார் நாடு முன்னர் என்ன பெயரில் அழைக்கப்பட்டது?
  பர்மா
* 'O' பூஜ்யத்தை முதலில் கையாண்டவர்கள் யார்?
  இந்தியர்கள்
* ரஷ்யா ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  கிரெம்ளின் மாளிகை



* இலங்கை பண்டைக் காலத்தில் 3 பெரிய இராச்சியங்களாக இருந்தது. ரஜரட்டை, மாயரட்டை, உருகுண என்பனவே அவையாகும். இதில் உருகுணா ரட்டையின் தலைநகரம் எது?
  மாகம அல்லது மகாநாககுல



* 'புலிச்சர்' விருது எத்துறையினருக்கு ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வழங்கப்படுகின்றது?
  ஊடகம், இலக்கியம், நாடகம் போன்ற துறைகளுக்குச் சிறந்த சேவை செய்வோருக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது
* வட துருவத்தை முதலில் சென்றடைந்தவர் யார்?
  ரொபட் எட்வின் பியர்ரி



* ரிமோட் கொன்ரோலை (தொலை இயக்கி) 1956 இல் கண்டுபிடித்தவர் தனது 93 வயதில், 2007 ஆம் ஆண்டு காலமானார். இவர் 180 க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைச் செய்து 'பேட்டன்' எனப்படும் கண்டுபிடிப்பு அங்கீகார உரிமையைப் பெற்றவர். இவரின் பெயர் என்ன?
  'ரோபட் அட்டல்'



* இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜூனியர் ரிச்சர்ட் ஜயவர்தன ஆவார். அவ்வாறே, இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
  D.S. சேனாநாயக்க



* இங்கிலாந்தின் நாணய அலகு ஸ்ரேலிங் பவுன்ஸ் ஆகும். அவ்வாறே, பிரானஸின் நாணய அலகு எவ்வாறு அழைக்கப்படும்?
  பிராங்க்ஸ்




* பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற முதல் ஆசிய நாடு மலேசியாவாகும். சார்க் நாடொன்றில் ஆசியா விளையாட்டுப் போட்டி நடைபெற்ற நாடு எது?
  இந்தியா. 2010 இல்



* பவுண்டன் பேனாவைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த (1883 இல்) 'லூயில் வொட்டமான்'. அதேபோல கணினி 'மௌஸ்' ஸை கண்டுபிடித்தவர் யார்?
  1970 இல் அமெரிக்காவைச் சேர்ந்த 'ட்கீளஸ் கோஸ்'
* 1949 சீனாவில் சோஷலிசப் புரட்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்தி சீனாவை கட்டியெழுப்பியவர் யார்?
  மாஓசேதுங்



* சர்வதேச விண்வெளி தினம் எது?
  ஏப்ரல்-12
* 'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்படுபவர் உ.வே சாமிநாத ஐயர் ஆவார். தமிழில் 'வோல்டர் ஸ்கட்' என அழைக்கப்படுபவர் யார்?
  கல்கி

தொகுப்பு: உடுவை பரந்தாமன்



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

## புயல்காற்றினால் 'மெனிலா' நகரம் நீரில் மூழ்கியது

பிலிப்பைன்ஸ் நாட்டில் வீசிய 'நெசெட்' என்று பெயரிடப்பட்ட புயல்காற்றினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் லட்சக்கணக்கானவர்கள் இருப்பிடங்களை இழந்துள்ளதுடன், ஏழு பேர் மரணமடைந்தும், 30 பேர் காணாமல் போயும் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மணிக்கு 170 கி.மீற்றர் வேகத்தில் வீசிய இந்த புயல் காற்றின்போது பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் தலைநகர் மெனிலா முற்று முழுதாக நீரில் மூழ்கியது. இதன்காரணமாக மெனிலாவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.



வழமையாக ஒவ்வொரு வருடத்திலும் 20 இற்கும் மேற்பட்ட புயல்காற்றுகளுக்கு ஆளாகின்ற பிலிப்பைன்ஸ், இம்முறை நீண்ட காலத்திற்குப் பின்னரே, இவ்வகையான பாரிய புயல் காற்றிற்கு முகம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அற்லஸ் கேள்வி - 328

கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டம் எந்த நகரில் நடைபெற்றது?

சரியான விடை.................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 328,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

### போட்டி இல - 326 இன் சரியான விடை: நைகர்

பரிசு பெறுவோர்

அப்துர் ரஹ்மான்,
மௌலானா வீதி, ஏறாவூர்.

ஃபாத்திமா ஸாரா,
மாலாவிய வத்தை
மாத்தறை

ஆயிஷா அஸ்ஹர்,
பேராதனை வீதி, கண்டி.

## சிறுவர்களை படையில் சேர்ப்பதை தடுக்கும் ஒப்பந்தத்திற்கு ஆதரவு

வயதில் குறைந்த பிள்ளைகளை கட்டாயப்படுத்தல் மூலம் இராணுவத்தில் சேர்ப்பதை தடுக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் தற்போது நூறு நாடுகள் ஒப்பமிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



உலக நாடுகளில் வயதில் குறைந்த லட்சக்கணக்கிலான பிள்ளைகள் வலுக் கட்டாயமாக இராணுவம் மற்றும் கிளர்ச்சிக் குழுக்களில் சேர்க்கப்பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவித்து வருகின்ற நிலையில் அதனை தடுப்பதற்கான ஒப்பந்தத்தில் ஏற்கனவே 95 நாடுகள் ஒப்பமிட்டிருந்தன. இந்த ஒப்பந்தத்திற்கே மேலும் 5 நாடுகள் தற்போது ஒப்பமிட்டுள்ளமையால் ஒப்பந்தத்திற்கு ஆதரவான எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது.

அங்கோலா, ஆர்மேனியா, சன்மரினோ, கொஸ்ட்டரிக்கா ஆகிய நாடுகளே புதிதாக இதில் ஒப்பமிட்ட நாடுகளாகும். எனினும் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் ஒப்பமிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த உலகக் கிண்ண 20/20 போட்டி இலங்கையில்

## கால அட்டவணை வெளியிடப்பட்டது

அடுத்த வருடத்திற் கான 'டுவென்டி டுவென்டி' உலகக் கிண்ணப் போட்டிகள் இலங்கையில் நடைபெறவுள்ளன. செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்ற இப்போட்டிகள் ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை நடைபெறும்.

இப்போட்டிகளுக்கான கால அட்டவணை கொழும்பில் வெளியிடப்பட்டது. மேற்படி அட்டவணையின்படி, இப்போட்டியில் 12 அணிகள் இடம்பெறும். இதில் தற்போதைய நடப்புச் செம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட, பத்து அணிகள் ஏற்கனவே 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு நேரடியாகத் தகுதிபெற்றுவிட்டன. மிகுதியாக உள்ள இரண்டு அணிகள் தகுதி காண் சுற்றின்மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ளன.

ஒட்டுமொத்தமாகத் தெரிவாகின்ற 12 அணிகள் A,B,C,D என நான்கு பிரிவுகளில் தலா மூன்று அணிகள் விதம் இடம்பெறும். இதற்கமைய, A பிரிவில் இங்கிலாந்து, இந்தியா அணிகளுடன் தகுதிச் சுற்றில் தெரிவாகும் அணியும் இடம்பெறும்.

B பிரிவில் அவுஸ்திரேலியா, மே.இ.தீவுகள் மற்றும் தகுதிச் சுற்றில் தெரிவாகும் மற்றொரு அணியும் இடம்பெறும்.

C பிரிவில் இலங்கை, தென்னாபிரிக்கா, சிம்பாப்வே அணிகள் இடம்பெறும்.

D பிரிவில் பாகிஸ்தான், நியூஸிலாந்து, பங்களாதேஷ் அணிகளும் இடம்பெறும்.

இத்தொடருக்காக, மூன்று மைதானங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானம், கண்டி பல்லேகல மைதானம், அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ மைதானம் ஆகியனவே அவையாகும்.

### மகளிர் 20/20 உலகக் கிண்ணம்

மகளிருக்கான 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளும் இலங்கையிலேயே நடைபெறவுள்ளன. காலி மைதானத்தில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 7 ஆம் திகதிவரை நடைபெறும். இதில் 8 அணிகள் போட்டியிடவுள்ளன.

# சானியா மிர்சா பாகிஸ்தானில்



இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தனது முழங்கால் காயத்திற்கு சத்திர சிகிச்சை செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் நடைபெற்ற பகிரங்க டென்னிஸ் போட்டியில் மிர்சாவின் முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக, தற்போது போட்டிகளில் கலந்துகொள்ளாமல் ஓய்வெடுத்து வருகின்றார் மிர்சா. இதேவேளை, மிர்சாவின் கணவரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வீரருமான சொய்ப் மாலிக் பாகிஸ்தானில் 20/20 செம்பியன் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்கின்றமையால் ஓய்விலுள்ள மிர்சா அப்போட்டிகளைக் கண்டுகளிப்பதற்காக பாகிஸ்தான் சென்றுள்ளார்.

சானியாவிற்கு ஏற்பட்டுள்ள முழங்கால் காயத்திற்கு தற்போது சிகிச்சை வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்குரிய வகையில் சுகம் காணப்படாவிட்டால், சத்திரசிகிச்சை மூலமே சிகிச்சை வழங்கப்பட வேண்டியிருக்கும் என்றும் மிர்சாவின் தந்தையார் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து அணியின் இந்திய விஜயம்



அடுத்த மாதம் (ஒக்டோபர்) இங்கிலாந்து அணி இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. இப்போட்டியில் 5 ஒருநாள் மற்றும் 'டுவென்டி டுவென்டியும் நடைபெறவுள்ளன. போட்டி அட்டவணையின்படி, ஒருநாள் போட்டிகளில் முதலாவது போட்டி ஒக்டோபர் 14 ஆம் திகதியும், இரண்டாவது போட்டி ஒக்.17, மூன்றாவது போட்டி ஒக். 20, நான்காவது போட்டி ஒக். 23, ஐந்தாவது போட்டி ஒக். 25 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. ஒரேயொரு 20/20 போட்டி ஒக். 29 ஆம் திகதி நடைபெறும்.

# விதிமுறை மாற்றத்தை வரவேற்கும் மாலிங்க



ஒருநாள் போட்டிகளில் சில விதிமுறைகளை மாற்ற வேண்டும் என்று இந்திய அணியின் டென்டுல்கர் தெரிவித்துள்ள கருத்திற்கு இலங்கையின் லசித் மாலிங்கவும் ஆதரவு தெரிவித்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளை நான்கு இன்னிங்ஸாக மாற்றி ஒவ்வொரு அணிக்கும் ஆரம்பத்தில் தலா 25 ஓவர்களை வழங்கிப் பின்னர் மீண்டும் 25 ஓவர்களை இரண்டு அணிகளுக்கும் வழங்கி மொத்தமாக 4 இனிங்ஸ்களை விளையாடுவதே சிறப்பாக இருக்கும் என்று அண்மைக் காலமாக டென்டுல்கர் தெரிவித்து வந்துள்ளார். இந்தக் கருத்தை தாமும் ஏற்றுக்கொள்வதாக லசித் மாலிங்க குறிப்பிட்டுள்ளார்.

இப்போதுள்ள ஒருநாள் போட்டி விதிமுறைகளின்படி, 34 ஆவது ஓவரிலேயே பந்தை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த விதிமுறையை ஏற்க மறுக்கின்ற மாலிங்க இதற்கு மாறாக, நான்கு இனிங்ஸ்களுக்கு விளையாடினால் பந்தைப் பலமுறை மாற்ற முடிவதோடு, அது பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகவே இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் ஒருநாள் போட்டியில் விதிமுறைகளை மாற்றுவது தொடர்பாக, ஐ சி சி இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள அக்தரின் கருத்து



இந்திய அணியின் டென்டுல்கர், டிராவிட் ஆகியோர் குறித்து தனது சுயசரிதை நூலில் சர்ச்சைக்குரிய விதமாக கருத்துக்களை முன்வைத்துள்ள பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் ஷொஹேப் அக்தர் மீது இந்தியாவிலிருந்து கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

தனது பந்துவீச்சிற்கு டென்டுல்கர் எப்போதும் பயந்த சுபாவத்துடனேயே துடுப்பெடுத்தாடி உள்ளதாகவும் டென்டுல்கர், டிராவிட் ஆகியோர் சிறந்த வெற்றியாளர்கள் இல்லை என்றும் தனது சுயசரிதை நூலில் அக்தர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கருத்துக்களே பலத்த சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

எனவே, இது விடயமாக, அக்தர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று மும்பாய் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த சர்ச்சையின் காரணமாக, மும்பாயில் இடம்பெறவிருந்த மேற்படி நூலின் வெளியீட்டு விழாவையும் ஒத்தி வைக்க வேண்டிய நிலைமை அக்தருக்கு ஏற்பட்டது.



## முழுமையாக வாசித்துவிட்டு விமர்சனம் செய்யுங்கள்

அக்தர்

"சச்சினைப் பற்றி தவறாக எதனையும் எனது சுயசரிதை நூலில் எழுதவில்லை. புத்தகத்தை முழுமையாக வாசித்த பின்னர் விமர்சிப்பதே முறையாகும்" என்று அக்தர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும், தெரிவித்துள்ள அவர், "குறிப்பிட்ட ஒரு போட்டியின்போது, நடந்த சம்பவத்தையும், அந்த சூழ்நிலையில் எழுந்த உணர்வுகளையும் அடிப்படையாக வைத்தே அப்படியான ஒரு கருத்தொன்றைத் தெரிவித்தேன்.

முழங்கை காயத்தால் அவதிப்பட்ட சச்சினை பௌன்ஸ் வீசி அச்சுறுத்தி நிலைகுலையச் செய்தேன் என்று மட்டுமே நான் கூறியுள்ளேன் இதைத்தவிர வேறு எதனையும் கூறவில்லை. எனவே, எவருமே எனது சுயசரிதை நூலை முழுமையாக வாசித்த பின் கருத்துச் சொல்வதே பொருத்தமாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளித்துறை ஆய்வுகளில் ஈடுபடும் நாடுகளின் தரவரிசைப் பட்டியல் 2011







அமெரிக்காவின் விண்வெளித்துறை, செய்மதி மற்றும் தொலைத்தொடர்பாடல் ஆலோசனை நிறுவனமாக செயற்படும் ஃபுட்ரன் (Futron) அமைப்பானது, சர்வதேச விண்வெளித்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளும் நாடுகளின் தரவரிசைப்பட்டியலை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

அதன்படி, இந்த அமைப்பின் 2011 ஆம் ஆண்டிற்கான தரவரிசைப் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. விண்வெளித்துறையில் முன்னணி வகிக்கும் 10 நாடுகளை உட்படுத்தி இந்த தரவரிசைப் பட்டியல் அமைந்திருந்தது. அந்த தரவரிசையின்படி ஐக்கிய அமெரிக்கா முன்னிலை வகிக்கின்றது. ஏனைய நாடுகளின் தரவரிசை வருமாறு: ஐக்கிய ராச்சியம், ரஷ்யா, சீனா, ஜப்பான், இந்தியா, கெனடா, தென்கொரியா, இஸ்ரேல், பிரேஸில்.

ஃபுட்ரான் (Futron) நிறுவனம் கடந்த வருடம் விண்வெளித்துறைப் பணிகளில் ஈடுபட்டுள்ள பத்து நாடுகளின் தரவரிசையை பட்டியலிட்டபோது, முன்னிலை வகித்த நாடுகளில் சில இம்முறை பின்னடைவைக் கண்டிருந்ததை இந்த வருடத்திற்கான தரவரிசைப் பட்டியலுடன் ஒப்பிட்டதனூடாக அறியக்கூடியதாக இருந்தது.

## நட்சத்திரங்களை விழுங்கும் கரும்பள்ளங்கள்




நட்சத்திரங்களை விழுங்கும் ஏராளமான கரும்பள்ளங்கள் (Black Holes) விண்வெளியில் காணப்படுகின்றன. எனினும், கரும்பள்ளங்களால் நட்சத்திரங்கள் விழுங்கப்படும் காட்சியை இதுவரை யாரும் கண்ணால் கண்டது இல்லை. ஆனால், கரும்பள்ளமொன்றால் நட்சத்திரம் ஒன்று விழுங்கப்படும் வீடியோ காட்சியை முதல் முறையாக விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

அதன்படி, நட்சத்திரமொன்று விழுங்கப்படும் இந்த நிகழ்வு 39 லட்சம் ஒளியாண்டுகளுக்கு அப்பால் விண்வெளியில் நிகழ்ந்துள்ளது. அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழக பேராசிரியர் டேவிட் பர்ரோஸ் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுதான் நாஸாவின் சக்திவாய்ந்த தொலைநோக்கி மூலம் இந்த அரிய காட்சியை படம்பிடித்துள்ளது.

அப்போது, நட்சத்திர மண்டலத்திலுள்ள சூரியன் போன்ற மிகப் பெரிய நட்சத்திரமானது கரும்பள்ளத்தில் மூழ்குவதையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த கரும்பள்ளங்கள் அருகில் உள்ள கிரகங்களையும் கவர்ந்து இழுக்கக்கூடிய ஈர்ப்பு சக்தியை அதிகம் கொண்டுள்ளதோடு, தன்னுள் ஈர்த்துக் கொண்ட நட்சத்திரத்தை மெல்ல மெல்ல அழித்துவிடும் தன்மையும் கொண்டவையாகும்.



## 'UARS' செய்மதியின் பாகங்கள் பூமியில் விழுந்தன





மேல் வளிமண்டல ஆய்வுக்காக நாஸாவால் விண்ணில் ஏவப்பட்ட மேல் வளிமண்டல ஆய்வுச் செய்மதி (UARS-Upper Atmosphere Research Satellite) கடந்த செப்டெம்பர் மாதம் பசுபிக் கடலில் விழுந்தது.

1991 ஆம் ஆண்டு நாஸாவால் விண்ணுக்கு ஏவப்பட்ட இந்த செய்மதி, கடந்த 2005 ஆம் ஆண்டு செயலிழக்கச் செய்யப்பட்டதன் பின்னர், அது பூமியை நோக்கி வர ஆரம்பித்தது. எனவே, அதன் பாகங்கள் பூமியின் எப்பகுதியிலேனும் விழலாம் என்று நாஸா எச்சரிக்கை விடுத்திருந்தது. அதாவது, செயலிழக்கச் செய்யப்பட்ட இந்தச் செய்மதி பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்தவுடனேயே அதன் பெரும்பாலான பாகங்கள் எரிந்துவிடும் என்று கூறப்பட்டது. ஆனாலும், அதன் எரியாத சுமார் 500 கிலோகிராம் பகுதிகள் பசுபிக் சமுத்திரத்தில் வீழ்ந்தன. அதன்படி, செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி இரவு 11. 30 மணிக்கும் செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி அதிகாலை 01.09 மணிக்கும் இடையில் அதன் எரியாத பாகங்கள் பூமியில் பசுபிக் சமுத்திரத்தில் விழுந்ததாக நாஸா அறிவித்துள்ளது.




## இரண்டு சூரியன்களைச் சுற்றி வரும் புறக்கோள் கண்டுபிடிப்பு



இரண்டு சூரியன்களைச் சுற்றிவரும் புறக்கோள் ஒன்று முதற்தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாஸாவின் கெப்லர் தொலைநோக்கியே இதனைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாஸா அறிவித்துள்ளது.

'கெப்லர் 16b' (Kepler-16b) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புறக்கோளானது, குளிர்ந்த வளிமண்டலத்தைக் கொண்டுள்ளமையால், இங்கு உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்தியமில்லை என்று கருதப்படுகின்றது. இந்த புறக்கோள் பூமியில் இருந்து சுமார் 200 ஒளியாண்டுகள் தூரத்தில் அமைந்துள்ளது.

இரட்டைச் சூரியன்களைச் சுற்றும் புறக்கோள்கள் பிரபஞ்சத்தில் காணப்படலாம் என வானியலாளர்கள் முன்னர் எதிர்வு கூறியிருந்தபோதும், இப்போதுதான் முதற்தடவையாக அத்தகைய புறக்கோளொன்று கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. கெப்லர்-16b கோளில் ஒரு நாள் நிறைவடையும்போது அங்கு இரண்டு சூரிய மறைவுகள் காணப்படும்.


இக்கோளின் இரண்டு சூரியன்களும் எமது சூரியனைவிட அளவில் சிறியவையாகும். இரண்டு சூரியன்களையும் அது 229 நாட்களுக்கு ஒருமுறை சுமார் 104 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் இருந்தவாறு சுற்றி வருகிறது. இது வெள்ளியின் சுற்றுவட்டத்தை ஒத்திருப்பதாக வானியலாளர்கள் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியிலிருந்து வெளிப்படும் நிறங்கள்

நிறம் என்பது நாம் கண்ணால் காணும் ஒருவித காட்சி அல்லது தோற்றமாகும். சூரிய ஒளியை அரியம் ஒன்றின்மூலம் செலுத்தினால் அது நிறமாலையாகப் பிரிவதைக் காணலாம். இது போன்று பிரிவதுதான் வானவில். இவை அனைத்தும் வெறும் அலைவரிசையே! ஒரு வினாடியில் துடிக்கும் துடிப்பிற்கு 'அலை' என்று பெயர். வானொலி,





தொலைக்காட்சி, டிரான்ஸ்மீற்றர்களில் இருந்து வெளிப்படுவதும் ஊடு கதிர்களும் கூட அலைதான். இவற்றையும் பொதுவாக 'ரேடியேஷன்' (வெப்பக்கதிர்) என்று அழைக்கின்றனர்.



அனைத்து வெப்பக்கதிர்களும் ஒருவிதத்தில் நிறத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், அவை எம்மால் பார்க்க முடியாத நிலையில் உள்ளன. ஒளி அலை மற்றும் ஒலி அலைகளுக்குமான வித்தியாசம் அலைநீளத்தில்தான் உள்ளது. ஒளி அலைகள் மிகவும் நெருக்கமானவை. ஒலி அலைகள் மிகவும் விரிவானவை. இவை மீற்றர், சென்ரிமீற்றர் என்ற அளவில் காணப்படும். ஓர் ஆங்ஸ்ட்ரொம் (ஒலி அலைகளை அளக்கும் அலகு) யுனிட் என்பது ஒரு மீற்றரில் ஆயிரம் கோடி பாகத்தைக் குறிக்கும். சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற அனைத்து நிறங்களுக்கும் இந்த அலைநீள வேறுபாடுகளே காரணம். அணுக்கருவுக்குள் இலக்ட்ரோன்கள் (மின்னணு) வேறு வட்டத்திற்கு செல்லும்போது ப்ரோட்டன்கள் வெளிப்படுகின்றன. அதனால்தான் ஒளியில் இருந்து நிறங்கள் வெளிப்படுகின்றன.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4306

எஸ்.அருண்சாந்த், பேராதெனிய வீதி, கண்டி.



அங்.இல: 4307

கே.நிஷ்மித்தா, பொத்தன, இதாகந்த.



அங்.இல: 4308

மு.தக்ஷலா, சுதுஹும்பொல வீதி, கண்டி.



அங்.இல: 4309

கே.கலைக்குமார், கந்தப்பளை, நுவரெலியா.



அங்.இல: 4310

எம்.எம்.முஸாஹிர், ரக்ஸபான, மல்வான.



அங்.இல: 4311

ஜெ.சுஜித்தன், கல்விப்பிள்ளையார் கோவிலடி, பொலிகண்டி.



அங்.இல: 4312

எஸ்.ரிகாஸா ரானா, ஜி.டீ.சி.வடக்கு வீதி, அட்டாளைச்சேனை-13.



அங்.இல: 4313

எம்.பி.ஹிர்ஸாத், ஹல்காயேன பிரிவு, பதுறலிய.



அங்.இல: 4314

எம்.எம்.நிஃப்லான், கல்பிடிய வீதி, நுரைச்சோலை.



அங்.இல: 4315

ஆர்.அப்துர் ரஹ்மான், மெத்தைப்பள்ளி வீதி, காத்தான்குடி-02

படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் கீழேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................

முகவரி:..................................

..................................

பாடசாலை:..................................

வகுப்பு:..................................

திகதி: ..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 3037
கொழும்பு

---

ஜேர்மனியில் 1895 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி கெர்ஹார்ட் டொமக் பிறந்தார். பக்ற்றீரியாக்களால் உருவாகும் நோய்களில் இருந்து நிவாரணம் கிடைக்க என்ட்டிபயொட்டிக் (Antibiotic) எனப்படும் மருந்துகள் பற்றிய ஆய்வில் வெற்றிகள் பல கண்டவர்தான் டொமக். அக்காலத்தில் பக்ற்றீரியாக்களால் உண்டாகும் தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் வேறு பல காரணங்களால் உருவாகும் சரும நோய்களுக்கும் சாயம் (Dyc) ஒரு மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அனைத்திற்கும் பொதுவான ஒரு மருந்து சரும நோய்களுக்கு உகந்ததல்ல என எண்ணிய டொமக் மருத்துவ ரீதியாக ரசாயனப் பொருள் சார்ந்த மருந்தினைக் கண்டுபிடித்து நிரந்தரத் தீர்வுக்கு விடை தேடினார் டொமக். இந்தத் தேடலின் பயனாக, புரோன்ட்டோஸில் எனும் பக்ற்றீரியாவுக்கான எதிர்மருந்தினை உருவாக்கினார்.

பக்ற்றீரியாக்களில் ஆயிரக்கணக்கான வகைகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் சுருள் பக்ற்றீரியா வகை ஆகும். இந்த

## சாதனையாளர்: மருத்துவம்



(1895-1964)


# கெர்ஹார்ட் டொமக்

பக்ற்றீரியா, டொமக்கின் மகளையும் தாக்கியது. இந்த நோயிலிருந்து மகளைக் காப்பாற்றும் முயற்சியில் தான் புரோன்ட்டோஸில் என்ற மருந்தைக் கண்டுபிடித்தார். தான் கண்டுபிடித்த மருந்தை தனது மகளுக்கே செலுத்தி ஆராய்ந்த இவர், அவளை நோயிலிருந்து முழுமையாகக் காப்பாற்றினார். சுருள் பக்ற்றீரியாக்களால் அவளுடைய கை முழுவதும் வெட்டி எடுக்கப்படவேண்டும் என மருத்துவர்கள் கூறியபோதும் இப்புது மருந்து வகையால் மகளை முற்றாக டொமக் குணமடையச் செய்தார்.

பக்ற்றீரியா, வைரஸ் போன்ற நுண்கிருமிகளால் உயிரை இழக்கும் அபாயம் உண்டு என்று அறிந்திருந்த அந்நாளில் அதற்கான நவீன மருந்து எதுவும் கண்டறியப்படவில்லை. அந்தக் குறையைப் போக்கியது டொமக்கின் புரோன்ட்டோஸில்தான். 1930 களில் பக்ற்றீரியா நுண்கிருமி நோய்களில் இருந்து காப்பாற்ற உகந்த ஒரே மருந்தாகத் திகழ்ந்தது. அதன்பின், 'பென்ஸிலீன்' வருகையால் புரோன்ட்டோஸில் மருந்து இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. இத்தனை சாதனைக்கும் காரணமான மருத்துவக் காவலரான கெர்ஹார்ட் டொமக் அவர்கள் 1939 இல் நொபெல் பரிசினைப் பெற ஜேர்மனி அரசு தடை விதித்தது. ஜேர்மனிய சோஷலிஸ கொள்கையைக் கண்டித்தும் மறுத்தும் விமர்சித்த ஒருவருக்கு 1935 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நொபெல் பரிசு வழங்கப்பட்டமையே இதற்கான காரணமாகும்.



ஜேர்மனிய அரசை எதிர்த்து விமர்சிக்கும் ஓர் அமைப்பிடம் இருந்து இனி ஜேர்மனியர் எவரும் 'நொபெல்' விருதினை வாங்கக்கூடாதென்று தடை விதித்தது. எனினும், 'இது தன்னுடைய அறிவியல் சார் உழைப்பிற்குக் கிடைத்த வெகுமதி. நான் கட்சி சார்பற்றவன்' எனக்கூறி டொமக் 'நொபெல்' பரிசு விழாவிற்கு செல்ல முனைந்தார். ஆனால், ஜேர்மனி அரசு அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. அதனால், விழாவிற்கு செல்ல முடியவில்லை. ஜேர்மனியச் சட்டம் வலுவிழந்த பின் 1947 இல் தான் தனது நொபெல் விருதினை டொமக் பெற்றார். எனினும், காலம் கடந்துவிட்டது என்ற காரணத்தால் நொபெல் விருதுடன் கிடைக்கும் பெருந்தொகைப் பணம் இவருக்கு கிடைக்கவில்லை. மருத்துவ சாதனையாளரான கெர்ஹார்ட் டொமக் 1964 ஏப்ரல் 24 ஆம் திகதி இயற்கை எய்தினார்.



ஆர்.ஜே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அந்தாட்டிக்காவின் குளிருக்கான காரணம்



புவியின் சாய்வு காரணமாக, அதன் வெப்பப் பிரதேசங்கள் மற்றும் இடைவெப்பப் பிரதேசங்கள் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, துருவப்பகுதிகளில் சூரிய ஒளிக்கதிர்கள் மிகவும் குறைவாகவே விழுகின்றன. அதனால், இரண்டு துருவங்களும் தொடர்ந்து ஆறு மாதங்கள் வரையில் இருளாகவே காணப்படும். சூரியஒளி படும்போதுகூட பனிப்பாறைகள், வெள்ளி போன்று மினுமினுப்படைந்து, அரைவாசி ஒளிக்கதிர்களை மீண்டும் தெறிப்படையச் செய்துவிடுகின்றன. அதனாலேயே, வட மற்றும் தென்துருவங்கள் இரண்டும் மிகமிகக் குளிராகக் காணப்படுகின்றன.

ஆயினும், தென் துருவமானது, வட துருவத்தை விடக் குளிராகக் காணப்படும். இதற்கான காரணம், பூமியின் தென் துருவம் அந்தாட்டிக்கா பகுதியில் அமைந்திருப்பதேயாகும். இது ஒரு தனிக்கண்டம். ஏனைய கண்டங்களுடன் ஒப்பிடும்போது, மிக மிக உயரத்தில் இருப்பதும் இக்கண்டமே! அதாவது, கடல் மட்டத்திலிருந்து 9 ஆயிரம் அடி உயரத்தில் இக்கண்டம் இருக்கின்றது. ஆனால், வடதுருவம் ஆர்ட்டிக் கடலின் நடுவே காணப்படுகின்றது. இது கடல் மட்டத்திலிருந்து ஓர் அடி உயரத்திலேயே காணப்படுகின்றது. அதனால்தான், தென்துருவத்தைவிட, வடதுருவம் மிகவும் குளிராகக் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி; ஆர்ட்டிக் கடற்பரப்பு வெயில் காலத்தில் வெப்பத்தைச் சேமித்து, குளிர்காலத்தில் காற்று மண்டலத்தை வெப்பப்படுத்தும் தன்மை கொண்டது.

# 25 கோடி ஆண்டுகளுக்கு முன்பே 'ஆழிப்பேரலை'


நில அமைப்புகள், புவியியல் மாற்றங்கள், சுனாமி போன்றவை தொடர்பாக, அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் மைக்கல் ப்ருக்ஃபீல்ட் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார். அண்மையில் இந்தியாவின் ஸ்ரீநகரில் உள்ள கேஷ்மீர் பல்கலைக்கழகத்தில் அவரது சிறப்புரை நிகழ்ச்சி



ஒன்று நிகழ்த்தப்பட்டது. அதன்போது, அவர் உரை யாற்றுகையில்;



"பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் கண்டங்கள் பிரிவுகளாக இல்லாமல் ஒன்றாகவே இருந்தன. 20 கோடி ஆண்டுகளுக்கு முன்னரான டிரயாசிக் காலத்தின்போது, லாரேசியா, கோண்ட்வான என இரு பிரிவுகள் மட்டுமே காணப்பட்டன. டேதிஸ் கடலால் அவை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தன. 25 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்த டேதிஸ் கடலில் ஏற்பட்ட ஆழிப்பேரலை குரியுள் கணவாய் (Guryul ravine) பகுதியை மிகப் பயங்கரமாகத் தாக்கியுள்ளது. இப்பகுதி தற்போது கேஷ்மீரில் உள்ளது. அதன்பின்னர், டேதிஸ் கடல் பலவிதமாக உருமாறி இந்திய பெருங்கடலாக மாறியுள்ளது. இப்பகுதியில்



பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் சுனாமி ஏற்பட்டதற்கான படிம ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதுதொடர்பாக மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உள்ளோம்'' என கூறுகின்றார் மைக்கல் ப்ருக்ஃபீல்ட்.

## 37 கோடி ஆண்டுகள் பழமைவாய்ந்த மீன்படிமம் கண்டுபிடிப்பு!



கெனடாவின் ஆர்ட்டிக் பகுதியில் மிகப் பழமைவாய்ந்த பிரமாண்டமான மீன் படிமத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதுவரை கண்டெடுக்கப்பட்ட மீன் படிமங்களில் இது மிகப் பழமையான, அரிய வகையைச் சேர்ந்தது எனவும் குறிப்பிடுகின்றனர். இதுகுறித்த முதல்கட்ட ஆய்வில் இந்த மீன் படிமம் 37 கோடி ஆண்டுகள் பழமை வாய்ந்தது எனவும் இது வட அமெரிக்காவின் கடற் பகுதியில் இருந்து இப்பகுதிக்கு வந்திருக்கக்கூடும் எனவும்





தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய மீன் இனங்கள் ஏனைய கடல்வாழ் உயிரினங்களை உணவாகக் கொள்ளும் இயல்புடையன. வித்தியாசமான துடுப்பைக்கொண்ட இந்த மீன் 'லக்கோக்நதுஸ் எம்ப்ரிய்' எனப்படுகின்றது. முழுமையாக வளர்ச்சியடைந்த இவ்வகை மீன்கள் பெரும்பாலும் 5 முதல் 6 அடி வரை நீளமுடையவை. மிகப்பெரிய தலை அமைப்பைக் கொண்டதுடன், கண்கள் மிகச் சிறிதாகவும் பெரிய உறுதியான தாடையமைப்பும் கூரிய பற்களையும் கொண்டது. இதுகுறித்த ஆராய்ச்சிகள் மேலும் தொடர்ந்தவண்ணமே உள்ளன.

# மருந்திற்குப் பயன்படும் 'ஒக்டோபஸ்' விஷம்



மெல்போர்ன் பல்கலைக்கழகம், நோர்வேஜியன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், ஹம்பர்க் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு அந்தாட்டிக்கா கடற் பகுதியில்



ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, அங்கு வாழக்கூடிய 4 புதியரக ஒக்டோபஸ்களைக் கண்டுபிடித்துள்ளனர். அவை மிகவும் விஷத்தன்மை வாய்ந்தவை.

அவ்வாறு விஷத்தன்மை வாய்ந்த ஒக்டோபஸ்களில் இருக்கக்கூடிய விஷத்தை எடுத்து பரிசோதனைகளை மேற்கொண்ட போது, அவற்றின்மூலம் மருந்துகளைத் தயாரிக்கமுடியும் எனக் கண்டறிந்துள்ளனர். இவைதவிர; கணவாய், ஸ்க்யூட் போன்ற மீன்களின் விஷத்தில் இருந்தும் மருந்துகளைத் தயாரிக்கலாம் எனவும் குறிப்பிடுகின்றனர். இவை 0 டிகிரி வெப்பநிலையை உடைய ஆழ் கடலில் வாழ்கின்றமையாலேயே இவற்றின் விஷத்தைப் பயன்படுத்தலாம் என தெரிவிக்கின்றனர் விஞ்ஞானிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'லெப்டொப்' பாவனையால் ஏற்படும் உபாதைகள்



டெஸ்க்டொப் மற்றும் லெப்டொப் கணினி போன்றவற்றை பயன்படுத்துதல் மற்றும் அவற்றை பாவிப்பதால் ஏற்படும் உடல் பாதிப்புகள் பற்றி அமெரிக்காவின் வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிறப்புக் குழு ஆய்வொன்றை மேற்கொண்டது. ஆய்வின்படி கைமணிக்கட்டுக்கு அதிக வேலை கொடுக்கும்போது 'கார்பல் டன்னல் சிண்ட்ரோம்' என்ற பாதிப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணினியில் உட்காரும்போது இடுப்பு, முதுகு, கழுத்து ஆகியவை நேர் செங்குத்தாக இருக்க வேண்டும். நம்மை அறியாமல் பல மணி நேரம் கூன் நிலையில் உட்கார்ந்தால் முதுகு வலி, வந்துவிடும். கழுத்தை வளைத்து கணினி திரையைப் பார்த்தால் கழுத்து வலி ஏற்படும். கணினியில் பணியாற்றும்போது இடையிடையே சிறிய ஓய்வு அளிப்பது கண்ணுக்கும் உடம்புக்கும் புத்துணர்ச்சி தரும். கணினியை விட மடிக்கணினியால் (லெப்டொப்) கழுத்து, முதுகு வலி அதிகம் ஏற்படுகின்றது. மடிக் கணினியில் திரையும் விசைப்பலகையும் அருகருகே உள்ளதால் கை மற்றும் கழுத்தை இடைஞ்சலான வகையில் வைத்து பார்க்க வேண்டிய நிலை ஏற்படுவதாலேயே இந்நிலை ஏற்படுகின்றது.

அதிக நேரம் இணையத்தளம் பார்த்தால் இந்த பாதிப்பு மேலும் அதிகமாகும். யு எஸ் பி இணைத்து மடிக்கணினியைச் சற்று தொலைவில் வைத்து வேலை செய்யலாம். வெளியே மடிக்கணினியை எடுத்துச் செல்பவர்கள் தேவையற்ற சுமைகளை குறைத்துக்கொள்வது நல்லது என்று குறித்த ஆய்வுகளின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது.






# தகவல்களை சேமிக்க புதிய 'நெனோ டொட்ஸ்' தொழில்நுட்பம்


கம்பியூட்டர்களில் தகவல்களை சேமித்து வைக்க ஹார்ட் டிஸ்க் எனப்படும் நினைவுத்தகடு பயன்படுத்தப்படுகிறது. இதேபோல மொபைல் போன்கள், டிஜிட்டல் கெமராக்கள் போன்றவற்றில் தகவல்களை பதிவுசெய்ய 'மெமரி கார்ட்' வசதி உள்ளது. கொள்திறனுக்கு ஏற்ப இந்த நினைவுத்தகடுகள் கிடைக்கின்றன. ஆரம்ப காலகட்டங்களில் இந்த நினைவுத்தகடுகள் அளவில் பெரிதாகவே இருந்தன.

தொழில்நுட்பம் வளரவளரச் சிறிய முத்திரை அளவிலான 'மெமரி' கார்ட்கள் உருவானதுடன் அதில் பல நூறு பக்கங்கள் உள்ள தகவல்களை சேமிக்கும் வசதி உருவானது. இப்போது நெனோ தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இதைவிட பல மடங்கு சேமிப்பு வசதி ஏற்பட்டுள்ளது.

இந்த வகையில் வந்துள்ள புதிய தொழில்நுட்பம்தான் 'நெனோ டொட்ஸ்' தொழில்நுட்பமாகும். அமெரிக்காவிலுள்ள வடக்கு கெரலினா பகுதியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளனர்.

நெனோ தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த 'மெமரி கார்ட்' என்பது ஒரு சதுர அங்குலம் அளவில் இருக்கும். இந்தச் சிறிய சிப்பில் லட்சக்கணக்கான நெனோ டொட்கள் இடம்பெற்று இருக்கும். இவை காந்த தொழில்நுட்பத்தில் இயங்கும். அதாவது, ஒரு புள்ளியில் நூறு கோடி பக்கங்கள் சேமிக்க முடியும். அடுத்த கட்டமாக லேசர் தொழில்நுட்பத்தில் இதை இயக்கும் வகையிலான ஆய்வுகளும் நடக்கின்றன. இந்த ஆய்வுகள் வெற்றி பெற்றால் இதைவிட அதிக அளவில் தகவல்களைச் சேமிக்கும் வகையில் ஹார்ட் டிஸ்க்குகள் மற்றும் மெமரி காட்கள் தயாரிக்கக் கூடிய வாய்ப்புக் கிட்டும்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 05, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org